பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 14 சனிக்கிழமை 29.06.2019 கதிர் 236

**இது ரகசியம் அல்ல!**

சரவணபவன் எம்.பியின் இந்திய எதிர்ப்புப் பேட்டியால் எழுந்த நெருக்கடியைச் சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கின்றார் சம்பந்தன்.
தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. அதன் முன் பக்கம் 02

# மரண தண்டனைத் தீர்மானம் எதற்காக? ஐ.நா. செயலருக்கு விளக்கிய மைத்திரி!



கொழும்பு, ஜூன் 29
இலங்கையில் மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்தும் தீர்மானம் தொடர்பில் ஐ.நா. பொதுச்செயலாளருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கமளித்துள்ளார். பக்கம் 11

## அடுத்த ஒரு வார காலத்துக்குள் மரண தண்டனை அமுலாகாது!

**நீதிமன்றத்தில் நேற்று அறிவிப்பு**

கொழும்பு, ஜூன் 29
எதிர்வரும் 07 நாட்களுக்குள் மரண தண்டனை எதுவும் நாட்டில் நிறைவேற்றப்பட மாட்டாது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சிறைச்சாலைகள் திணைக்களம் பக்கம் 11

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் ரிஷாத்துக்குத் தொடர்பு இல்லை!

**தெரிவுக்குழுவுக்கு அறிவித்தார் பதில் பொலிஸ்மா அதிபர்**

கொழும்பு, ஜூன் 29
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுக்கும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எழுத்துமூலமாகத் தகவல் வழங்கியுள்ளார்.
உயிர்த்த பக்கம் 11

## பலாலி ஓடுதள அபிவிருத்திப் பணி ஜூலை 5 ஆம் திகதி ஆரம்பமாகும்

**சபையில் நேற்று அறிவித்தது அரசு**

கொழும்பு, ஜூன் 29
பலாலி விமான ஓடுதளத்தைச் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்துவதற்கான அபிவிருத்திப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பாகும் பக்கம் 02

# மைத்திரியின் கோமாளிக்கூத்து இன்னும் 5 மாதங்களே தொடரும்!

**ஒக்டோபர் சதிப் புரட்சியை முறியடித்ததே அவருக்கு எங்கள் மீதும் 19 மீதும் கோபம் என்கிறார் சுமந்திரன்**

யாழ்ப்பாணம், ஜூன் 29
அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலமாகத்தான் ஒக்டோபர் அரசியல் சதிப் புரட்சி முறியடிக்கப்பட்டது. அதனால்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 19ஆவது திருத்தத்தின் மீதும் கோபம்; எங்கள் மீதும் கோபம்.
– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பக்கம் 11



## புதிய அரசமைப்புக்கு நடந்தது என்ன? ஜூலை 25, 26 இல் விசேட விவாதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
புதிய அரசமைப்பை உருவாக்கும் திட்டத்துக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அடுத்த மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் நடைபெறவுள்ளது.
– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற பக்கம் 02

## சி.ஐ.டி. மீது நம்பிக்கையில்லை!

**வெளிநாட்டு நிபுணர்களை இங்கு அழைக்க ரதன தேரர் வலியுறுத்து**

கொழும்பு, ஜூன் 29
சி.ஐ.டியின் சமூகக் கொள்கை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பக்கம் 02

## ஜனாதிபதி மைத்திரியை எச்சரிக்கின்றது ஜேர்மனி

கொழும்பு, ஜூன் 29
மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதன்மூலம், சர்வதேசத்தில் இலங்கை கொண்டிருக்கும் பக்கம் 02

## பூஜித, ஹேமசிறி கைதாவர்?

கொழும்பு, ஜூன் 29
உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களைத் தடுக்கத் தவறினர் எனப் பொலிஸ் மா அதிபர் பூஜித மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் பக்கம் 11

# சஹ்ரானை வாழ்நாளில் நான் கண்டதே இல்லை!



**தாக்குதலின் பின்பே படத்தை பார்த்தேன் என்கிறார் ரிஷாத்**

கொழும்பு, ஜூன் 29
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீமை என் வாழ்நாளில் நான் கண்டதே இல்லை. தாக்குதலின் பின்னரே சஹ்ரானின் படத்தைப் பார்த்தேன்.
– அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார். பக்கம் 11

காலைக்கதிர் Kalaikathir


# பொதுஜன பெரமுன – கூட்டு எதிரணி சேர்ந்து தேர்தலுக்குப் புதிய கூட்டணி

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் உட்பட ஏனைய சகல தேர்தல்களிலும் கூட்டணி அமைத்து அதன் கீழ் போட்டியிட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் கூட்டு எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இணைந்து தீர்மானம் எடுத்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் புதிய கூட்டணியொன்றைப்பதிவு செய்வது தொடர்பிலும் விரிவான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னணி அரசியல் கட்சிகள், பல்சமூக அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், சமய அமைப்புக்கள் ஆகியன இணைந்து இப் புதிய கூட்டணி அமைக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய கூட்டணியின் கீழ் தேர்தலை வெற்றி கொள்வதற்காக நாடு முழுவதும் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாராகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் இந்தக் கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து கொள்ளுமா என்பது தெரிய வரவில்லை.

## சமுர்த்தி உத்தியோகத்தர் நேற்று வெட்டிக் கொலை!

### மத்துகமவில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 29

மத்துகம, தெல்கஹவத்தையில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரை முன்னாள் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொலை செய்திருக்கலாமெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் மீது கைக்குண்டொன்றை வீசி தாக்கவும் கொலையாளி முற்பட்டார் எனக் கூறும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஜ)

## தொடர் வேலைநிறுத்த எச்சரிக்கை விடுத்தது ரயில்வே தொழிற்சங்கம்!



கொழும்பு, ஜூன் 29

வேலைநிறுத்தம் செய்தவர்கள் மீது அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுத்தால் 24 மணி நேர வேலைநிறுத்தத்தை தொடர் வேலைநிறுத்தமாக நீடிக்க முடிவு செய்துள்ளதாக ரயில்வே லொக்கோ கோமோடிவ் ஒப்பரேட்டிவ் இன்ஜினியர்ஸ் பொதுச் செயலாளர் இந்திகா தொடங்கொட கூறினார்.

அனைத்து ரயில்வே தொழிற்சங்கங்களும் அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம், வங்கி ஊழியர் சங்கம், துறைமுகங்கள் மற்றும் பெட்ரோலிய சங்கங்களுடன் இது பற்றிகலந்துரையாடியுள்ளனஎன அவர் மேலும் குறிப்பிட்டார். (ஜ)

## வெளிநாட்டிலிருந்து தபாலில் போதைப்பொருள் கடத்தல்!

### நீர்கொழும்பில் மூவர் சிக்கினர்

ஐரோப்பிய நாடொன்றில் இருந்து இலங்கைக்குத் தபால் மூலமாக கடத்தப்பட்ட எட்டு லட்சம் ரூபா பெறுமதியான 230 கிராம் மாஜுவானா (உருகுவே கஞ்சா) போதைப்பொருள் நீர்கொழும்பு கட்டான தபால் நிலையத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும்போது சிக்கியது.

கட்டான பொலிஸாரால் இது பறிமுதல் செய்யப்பட்டதுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் கட்டான பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றுக்கு கமையவே போதைப்பொருள் இருந்த தபாற்பொதியைத் தபால் நிலையத்தில் இருந்து பெற்றுச் செல்கையில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்தப் போதைப்பொருள் கடத்தலின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதற்காகவே இந்தப் போதைப்பொருள் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்படுவதாகவும், கடந்த பல மாதங்களாக இவ்வாறு தபால் மூலமாக வெளிநாட்டில் இருந்து மாஜுவான (உருகுவே கஞ்சா) வரவழைக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு போலாவலான பிரதேசத்தைச் சேர்ந்த சேர்ந்த ரசிக சுரங்க மற்றும் நீர்கொழும்பு கொச்சிக்கடை, முன்னக்கரைப் பிரதேசங்களை சேர்ந்த நீல் சுரங்க, சந்தீப் எனும் சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டான பொலிஸார் மேற்கொள்கின்றனர். (ஜ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் கட்டளைகள் தொடர்பிலான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பலாலி விமான ஓடுதளம் பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்தப்படும். இதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

இரண்டு அல்லது மூன்று மாதக் காலத்துக்குள் இந்த அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படும். பலாலி விமான நிலையத்தின் ஊடாகச் சிவில் விமான சேவைகள் முன்னெடுக்கப்படும்.

இலங்கையில் 15 விமான நிலையங்கள் உண்டு. இவற்றில் 2 சர்வதேச விமான நிலையங்கள் ஆகும். மத்தள விமான நிலையம் தற்பொழுது செயற்பட்டுவருகின்றது. இலங்கை சிவில் விமான சேவை எட்டு தெற்காசிய மத்திய நாடுகளில் முதலிடத்தில் இடம்பெற்றுள்ளது.

இது ஆசிய நாடுகள் மத்தியில் ஆறாவது இடத்திலும் உலக நாடுகள் மத்தியில் 19 ஆவது இடத்திலும் இடம்பெற்றுள்ளது. விமான நிலையங்களில் நவீன பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது – என்றார். (ஜ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகாரத்தை இழக்கும் அபாயம் ஏற்படும் என ஜேர்மனி எச்சரித்துள்ளது.

போதைப்பொருள் குற்றவாளிகள் நால்வருக்கு விரைவில் மரண தண்டனை நடைமுறைப் படுத்தப்படும் என்றும், அதற்குரிய அனுமதிப் பத்திரங்களில் கையெழுத்திட்டு விட்டதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தமையை அடுத்து, சர்வதேச நாடுகள் பலவும் கடும் அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளன.

ஜேர்மனியின் ஆளும் சமஷ்டிக் கட்சியின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான செயற்திட்டங்களுக்கான வெளிவிவகார அலுவலகத்தின் ஆணையாளர் பார்பெல் கொப்லர், நான்கு கைதிகளுக்கு விரைவில் மரண தண்டனைநிறைவேற்றப்படவுள்ளதாக ஜனாதிபதி சிறிசேன பகிரங்கமாக அறிவித்தமை தொடர்பில் வெகுவாக அவதானம் செலுத்தியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

மரண தண்டனையை அமுல்படுத்துவதைத் தவிர்ப்பதன் ஊடாக கடந்த 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்திருக்கும் நடைமுறையைத் தொடர்ந்து பேணுமாறும், கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கை அதுவாகவே மரண தண்டனைக்கு எதிராக வெளிப்படுத்திய நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் இலங்கை அரசிடம் கொப்லர் கேட்டுக்கொண்டிருக்கின்றமையுடன், நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் மையப்படுத்தி முன்நோக்கிச் செல்லும் பாதையில் மரண தண்டனை நிறைவேற்றம் என்பது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியதொன்றாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னோட்டமாக கட்சியின் இதுவரை காலம் இருந்த மத்திய குழுவின் கூட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தல் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த சிறிதரன் எம்.பி. தவிர, பெரும்பாலும் எல்லா உறுப்பினர்களும் பங்கு பற்றினர்.

கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராக கனடாவிலிருந்து 'இறக்குமதி' யான சண்முகம் குகதாசன் தெரிவானமை குறித்து திருகோணமலை மாவட்டப் பிரதிநிதிகள் தண்டாயுதபாணி, ஸ்ரீஸ்காந்த ராஜா போன்ற பலர் மனம் புழுங்கி உரையாற்றினர்.

எனினும் சம்பந்தரும், மாவையும் நிலைமையைச் சமாளித்து அந்தத் தெரிவை நியாயப்படுத்தி ஏனையோரின் வாயை அடக்கினர்.

இதற்கிடையில் –

புதிதான மீண்டும் தெரிவு செய்யப்பட்ட இந்தியப் பிரதமர் மோடியை சரா எம்.பி. வாங்கு, வாங்கென்று வாங்கி ஒரு பகிரங்கப் பேட்டி கொடுத்தமையால் எழுந்த சர்ச்சையைச் சமாளிக்க சம்பந்தன் ஒரு திட்டம் போட்டார். அதன்படி நேற்றைய கூட்டத்தில் விடயங்கள் ஒப்பேறின.

'சர்வதேசம் மற்றும் இந்தியாவின் ஆதரவுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு' என்ற வாசகம் அடங்கிய பிரேரணை ஒன்றின் நகல் வடிவத்தை கூட்டத்தில் மாவையர் வாசித்தார். உடனே சுமந்திரன் குறிப்பிட்டார்.

*"நீங்கள் இந்தியாவின் ஆதரவுடன் தீர்வு முயற்சி என்கிறீர்கள். இங்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தியாவைக் காட்டமாகத் தாக்கி பகிரங்கப் பேட்டி அளிக்கின்றார். அப்படியானால் கட்சியின் நிலைப்பாடு யாது?"* – என்று வினா எழுப்பினார்.

அவர் எதிர்பார்த்தபடி உடனே சரா எம்.பி. துள்ளி எழுந்தார்.

தாம் இந்தியாவைத் தாக்கிப் பேட்டியளிக்கவில்லை என்றும் –

தமது பேட்டியின் ஒரு பகுதியை மட்டும் ஒளிபரப்பி அந்த ஊடகம் அதைத் திரிவுபடுத்தி விட்டது என்றும் –

இந்தியாவின் நியாயமான பங்களிப்பை தாமும் எதிர்பார்க்கின்றார் என்றும் –

விளக்கமளித்தார் சரா எம்.பி.

*"அப்படியா? அப்படி என்றால் இந்தியா மீது எங்களுக்கு – எங்களின் கட்சிக்கு – முழு நம்பிக்கை இருப்பதை உறுதிப்படுத்தி ஒரு தீர்மானத்தை இன்று மத்திய குழுக் கூட்டத்தில் நிறைவேற்றி இந்தியாவுக்கு அனுப்பி வைப்போமே!"* – என்றார் சுமந்திரன்.

அதற்கு சரா எம்.பியும் ஆதரவளித்தார். அவரது பூரண இசைவோடு இந்தியா மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நேற்று கட்சியின் மத்திய குழுவினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அது இந்தியத் தரப்புக்கும் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இந்தியா தொடர்பில் சரா எம்.பியினால் ஏற்படுத்தப்பட்ட damage ஐ, நாசூக்காக அதே சரா எம்.பியை வைத்தே damage clearing செய்வித்தார் கிழட்டு நரித் தந்திரசாலியான சம்பந்தன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு – அறிவிப்பு – இன்று கட்சியின் மாநாட்டில் வெளியாகும்.

ஏற்கனவே இப்பத்தியில் நான் சுட்டிக்காட்டியபடி அதே தலைவர் (மாவை), செயலாளர் நாயகம் (துரைராஜசிங்கம்) பதவிகளில் நீடிப்பர்.

பேராசிரியர் சிற்றம்பலம் இதுவரை அலங்கரித்த சிரேஷ்ட உபதலைவர் பதவி இம்முறை சி.வீ.கே.சிவஞானம் வசமாகும்.

வேறு பெரிய மாற்றங்களுக்குப் பெரும்பாலும் இடமில்லை என்பதுதான் நிலைமை.

- மின்னல் -

## சி.ஐ.டி. மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.எஸ்.திசேரா, வைத்தியர் ஷாபி தொடர்பில் நீதிமன்றத்தில் முன்வைத்த விளக்கங்களினால் ஒட்டுமொத்த சி.ஐ.டி மீதான நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் தெரிவித்தார்.

குருநாகல் நீதிமன்றத்தில் வைத்தியர் ஷாபி தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் எனவிசேட வைத்தியர் ஒருவர் தன்னிடம் குறிப்பிட்டார் என திசேரா மன்றில் தெரிவித்தார். அந்த விசேட வைத்தியர் யார் என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

முரண்பாடான கருத்துக்களினால் சி.ஐ.டியின் மீதான நம்பிக்கை இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. சி.ஐ.டியின் உயர் அதிகாரிகள் முதலில் இவர் மீது விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். அரசியல் தலையீடுகளினாலேயே சுயாதீன விசாரணைகள் இடம்பெறவில்லை. இவ்விவகாரத்தைச் சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்வோம்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பிரதான வைத்தியப் பிரிவு இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. அடுத்த வாரம் இந்தியாவிலுள்ள சிறப்பு வைத்திய நிபுணர்களை இலங்கைக்கு வரவழைத்து சுயாதீனப் பரிசீலனைகள் இடம்பெறும் –என்றார். (ஜ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கரவெட்டி புதுத்தோட்டம் விநாயகர் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டே ஆகவேண்டும். அந்தவகையில், புதிய அரசமைப்புக்கு என்ன நடந்தது? என்ற தலைப்பில் நாடாளுமன்றத்தில் விசேட விவாதத்தைக் கோரியிருந்தோம். அதற்கமைய அடுத்த மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் நடைபெறவுள்ளது.

புதிய அரசமைப்பு முயற்சி தொடரும். இந்த விடயத்தில் ஜனாதிபதி பின்னிற்கின்றார் என்பதற்காக அந்த முயற்சியை நாம் கைவிடப்போவதில்லை.

ஜனாதிபதி தலைகீழாக நின்றாலும் நாம் நேராக நின்று இதனைச் செய்து முடிப்போம் – என்றார். (ஜ)

# யாழ்.பல்கலை கல்விசாரா ஊழியர்கள் நியமனம் உயர்கல்வி அமைச்சரின் கவனத்துக்குச் சென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்கள் நியமனங்களில் ஏற்பட்டிருக் கும் நிலைமைகள் குறித்து பதில் உயர்கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நாடாளுமன்றத் தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் இந்த விடயம் உயர்கல்வி அமைச்சின் பதில் அமைச்சர் லக்கி ஜயவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் சுற்றறிக் கையின்படி அமைச்சின் பரிந்துரைப் பட்டியலுக்கமைய நியமனங்களைச் செய் வதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைகளைப் போக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி மாயாதுன்னைக்குப் பதில் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 876 ஆம் இலக்க சுற்றறிக்கை யின்படி குறிப்பிட்ட பதவிகளுக்கான ஆள்சேர்ப்பு விண்ணப்பங்கள் உயர் கல்வி அமைச்சின் பரிந்துரைப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பல்கலைக் கழக ஆள்சேர்ப்புப் பிரமாணங்களுக் கமைவாக போட்டிப்பரீட்சை, நேர்முகத் தேர்வின் மூலமே வெற்றிடங்கள் நிரப் பப்படுகின்றமை வழமையாகும்.

எனினும் யாழ். பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியின் வேண்டுதலின் பேரில் முகாமைத்துவ உதவியாளர், வேலை உதவியாளர், நூலகத் தகவல் உதவியாளர், ஆய்வு கூட உதவியாளர் மற்றும் பாதுகாப்பு அலுவலர் பதவிக ளுக்காக 324 பேரது விவரங்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்திருந் தன.

அவற்றில் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் சிலரது பிள்ளைகளின் பெயர்கள் இடம்பெறவில்லை என்பதற்காக இந்த நியமன நடைமுறைகளை இரத்துச் செய்வதற்கு பல்கலைக்கழகத்தில் உள்ள தொழிற்சங்கம் ஒன்று முயற்சிகளை மேற்கொள்வதாகவும், அமைச்சின் தெரிவைக் கேள்விக்குள்ளாக்கும் வகை யில் சம்பந்தமில்லாத வகையில் முஸ் லிம்கள் அதிகமாக உள்வாங்கப்பட்டிருப் பதாக குற்றச்சாட்டுகளை முன்வைத்து பல்கலைக்கழகத்தின் பேரவை மூலம் நியமன நடைமுறைகளை இடைநிறுத்து வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்ப டுகின்றன என்றும் ஆதாரங்களுடன் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. (ஐ)

# அமெ. உடன்பாடு குறித்து பொய்யான பரப்புரைகள்

## மங்கள சமரவீர காட்டம்

**கொழும்பு, ஜூன் 29 அமெரிக்காவுடனான உடன்பாடுகள் குறித்து, வங்குரோத்து அரசியல்வாதி களின் ஒரு குழுவே கொந்தளிப்பை ஏற்படுத் தும் நோக்கில் பொய்களைப் பரப்புகிறது என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

அமெரிக்க-இலங்கை இராணுவ உறவுகளுக்கு எதிராகப் பரப்புரை செய்பவர்களில், வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற அரசியல்வாதி களும் உள்ளனர்.

அமெரிக்காவுடன் கையகப்ப டுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்பாடு, சோபா உடன்பாடு, மிலேனியம் சவால் உடன்பாடு ஆகி யவற்றில் கைச்சாத்திடக் கூடாது என விமல் வீரவன்ஸ தலைமை யிலான குழுவினர் அமெரிக்க எதிர்ப்புப் பரப்புரை ஒன்றை மேற் கொள்கின்றனர்.

அத்தகைய ஒப்பந்தங்களை எதிர்ப்பவர்கள் அமெரிக்காவுடனான இரு தரப்பு உறவைக் குறைத்து மதிப்பிட்டுள்ளனர். அமெரிக்கா எப்போதும் இலங்கைக்கு ஆதர வாக இருந்தது.

அமெரிக்காவுடன் உடன்பாடு களில் கையெழுத்திடுவதற்கு எதிர்க்கட்சிகள் வெளியிட்டு வரும் எதிர்ப்புகள், அமெரிக்காவுடனான உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி பங்காளியாக அமெரிக்கா இருக்கிறது. ஆண்டுக்கு 370 கோடி டொலர் பொருள்கள் சேவைகளை இலங்கையில் இருந்து கொள் வனவு செய்கிறது, அமெரிக்கா.

போர்க்காலத்தில், பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய



ராஜபக்ஷ கையெழுத்திட்ட, கைய கப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவை கள் உடன்பாட்டை, (2017 இல் காலாவதியானது), தற்போதைய உடன்பாட்டுடன் ஒப்பிட்டு, புதிய உடன்பாட்டில் நுழைந்ததால், நாட் டுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள் ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட் டுகின்றன.

இரண்டுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. இலங்கை முதன்முதலில் 1995 ஆம் ஆண்டி லேயே, சோபா உடன்பாட்டுக்குள் நுழைந்தது - என்றார். (ஐ)

# இலங்கையில் திட்ட முன்னெடுப்பு: இந்திய – ஜப்பான் பிரதமர்கள் பேச்சு


ரோக்கியோ, ஜூன் 29

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் உட்கட்ட மைப்புத்திட்டங்களை கூட்டாக முன்னெடுப்பது குறித்து ஜப்பானிய -இந்தியப் பிரதமர்கள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

ஜி - 20 மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜப்பான் சென்றுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஒசாகாவில், ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயைச் சந்தித்து பேச்சு நடத்தி னார்.

இந்தச் சந்திப்பின் போது, ஆசிய – பசுபிக் இணைப்பு மற்றும் இலங்கை, மியான்மார், பங்களாதேஷ் போன்ற அயல் நாடுகளில் ஜப்பானுடன் கூட்டாக உட்கட்டமைப்புத் திட்டங் களை முன்னெடுப்பது குறித்து, இரு தலை வர்களும் விவாதித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள் கலன் முனைய அபிவிருத்தி திட்டத்தில் இரண்டு நாடுகளும் இணைந்து செயற்பட இணங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அரச சாரதிகள் சங்க பொதுக்கூட்டம்

*யாழ்ப்பாணம், ஜூன் 29*

*வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு தலைவர் ம.கஜந்தன் தலைமையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.*

*அனைத்து பொதுச் சபை அங்கத் தலைவர்களையும் கலந்து கொள்ளு மாறு சங்கத் தலைவர் கேட்டுக்கொண் டுள்ளார். (இ)*

# தூக்குத் தண்டனை கைதிகள் 1261 பேர்!

*கொழும்பு, ஜூன் 29*

*தற்போது இலங்கைச் சிறைகளில் தூக்குத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் எண்ணிக்கை 1261 என அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.*

*அவர்களில் 297 பேர் வெலிகடைச் சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.*

*தூக்குத் தண்டனை கைதிகளில் 823 கைதி கள் தண்டனைக்கு எதி ராக மேல்முறையீட்டு மனுக்களைச் சமர்ப்பித் துள்ளனர். அவர்களின் 36 பெண்களும் அடங்குவர்.*

*எஞ்சிய 438 தூக்குத் தண்டனை கைதிகள் இந்த முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை.*

*தூக்குத் தண்டனைக்காக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட 18 கைதிகளின் பட்டியலில் தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்யாத கைதிகளே உள்ளடங்கியுள்ளனர். (ஐ)*

# தௌஹீத் ஜமாத்துக்கு எதிர்காலத்தில் தலைமையேற்கவிருந்தவரும் கைது!

## சபையில் கூறினார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 29

சஹ்ரான் மற்றும் ரில்வானுக்குப் பின்னர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப் புக்குத் தலைமையேற்கவிருந்த நௌபர் என்ற நபரைக் கைது செய்துவிட்டோம். இனிமேல் இவர்களால் அணியாகச் செயற்பட எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் மத ரீதியில் முன்னெடுக்கும் இந்த பயங்கரவாதம் தனி நபராலும் இடம்பெறலாம் எனப் பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிக்கும் விவாதத்தில் பதி லுரை ஆற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் 9 பெண் கள் உள்ளிட்ட 105 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைகள்



முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்ப தைக் கூற முடியும். அதேபோல் இந்தத் தாக்குதல் குறித்து எமக்கு சர்வதேச விசார ணைக் குழுக்கள் உதவி செய்தன. அவர் களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.

அதேபோல் சஹ்ரான் அணியை நாம் முழுமையாகப் பிடித்துள்ளோம். சஹ்ரா னின் பின்னர் அவரது தம்பி ரில்வான் தலைமைத்துவம் எடுக்க இருந்தார். ஆனால் அவர் இறந்துவிட்டார். அவரின் பின்னர் நௌபர் என்ற நபர் தம்புள்ளை யில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்தான் அடுத்த தலைமையைக் கையில் எடுக்க இருந்தவர். அதேபோல் குண்டு தயாரிக்க இருந்த நபர்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டனர். இப்போது ஏன் அவசரகாலச் சட்டம் என்ற கேள்வி எழும். ஆனால் விசாரணைகளை நடத்தவேண்டும். இன்றும் சஹ்ரானின் சகாக்கள் கைதாகி வருகின்றனர். ஒரு சிறு உதவி செய்த நபர்களையும் நாம் கைது செய்கின்றோம்.

ஆகவே இந்தத் தேடுதல்கள் நடத்த மேலும் ஒரு மாதகால அவகாசம் வேண்டும். அதற்காகவே சட்டத்தை நீடித்துள்ளோம். இன்னும் ஒரு மாத காலத்தில் அவசரகால சட்டத்தை நீக்க நாம் நடவடிக்கை எடுக்க முடியும். எவ்வாறு இருப்பினும் கோவில் கள், பாடசாலைகள் மற்றும் தூதரகம் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு இன்னும் உறுதிப்படுத்தப்படவேண்டிய தேவை உள் ளது. ஆகவே ஒரு மாத காலமேனும் நீடிக்க வேண்டும் என நினைக்கின்றோம்.

இராணுவத் தளபதி கூறியது சரி. இந் தத் தாக்குதல் எப்போதும் எங்கேயும் நடக் கலாம். இது மதம் சார்ந்த பயங்கரவாதம். ஒரு தனி நபர் எந்த வகையிலும் எதை ஆயுதமாகப் பயன்படுத்தியும் தாக்குதலை நடத்த முடியும். ஆகவே இனி எப்போதும் இந்தத் தாக்குதல் மாதிரி ஒன்று நடக்காது எனக் கூற முடியாது. ஆனால் சஹ்ரான் போன்று ஒரு குழுவால் இதனை இன்னொரு முறை செய்யமுடியாது என்று உறுதி யாகக் கூற முடியும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நாட்டின் தலை(வர்)விதி!

தாம் அதிகாரத்தை விட்டு இறங்க முன்னர் நாட்டை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளி ஒரு கரை கண்டு விட்டுத் தான் இறங்குவது என்ற ஒரே முடிவில் இருக்கின்றார் போலும் நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தம்பாட்டில் – வீம்புக்கு – அவர் எடுக்கும் முடிவுகள் நாட்டைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளுவதைக் கண்டு வந்திருக்கிறோம்.

அந்த வரிசையில் மற்றொரு நெருக்கடியை ஏற்படுத்த அவர் தயாராகி விட்டார் எனத் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்த பிரதமரை – அவரை பதவி விலக்குவதற்கான அதிகாரம் தமக்கு இல்லாத போதிலும், அவரைப் பதவி விலக்கி பெரும் அரசியல் நெருக்கடி ஒன்றைத் தோற்றுவித்தார்.

நாடாளுமன்றப் பெரும்பான்மை பலம் பெறமுடியாதவரை பின் கதவால் பிரதமராக்கி அரசியல் நெருக்கடியைத் தீவிரமாக்கினார்.

அப்படிப் பின் கதவால் வந்த பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட பின்னரும் அவரையே பிரதமராக அங்கீகரித்துக் குழப்பத்தை உச்சிக்குக் கொண்டு சென்றார்.

தமக்கு இல்லாத அதிகாரத்தைப் பிரயோகித்து நாட்டின் நாடாளுமன்றத்தைக் கலைக்கிறார் என அறிவித்து, புதிய பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்து, நாட்டில் அரசியல் களேபரத்துக்கு வழி செய்தார்.

கடைசியாக உயர்நீதிமன்றம் தலையிட்டு, அவரது முடிவுகளுக்கு ஆப்பு வைக்கும் உத்தரவை – தீர்ப்பை – பிரகடனப்படுத்தி, நிலைமைகளைச் சீர்செய்து சமாளிக்க வேண்டியதாயிற்று.

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் அவர் நடந்து கொண்ட விதம் நாட்டை எத்தகைய பேரவலத்தில் மூழ்கடித்தது என்ற உண்மை அம்பலமாவதைச் சகிக்க முடியாத அவர், அதை அம்பலப்படுத்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை வைது தள்ளுகின்றார்.

இப்படி அவர் ஏற்படுத்தும் தொடர் குழப்பங்களின் வரிசையில் அடுத்ததுதான் மரண தண்டனைக் கைதிகளுக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றும் அவரது 'கிளை மாக்ஸ்' நடவடிக்கை.

கடந்த நாற்பது ஆண்டுகளாக இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. அத்தகைய மிருகத்தனமான தண்டனையை அரசும் அரசுத் தலைவர்களும் கடந்த நான்கு தசாப்தங்களாக முன்னெடுக்க இடமளிக்கவில்லை. அதன் மூலம் நாகரிக உலகில் இலங்கைக்கு கௌரவ இடம் ஒன்றை அத்தலைவர்கள் பெற்றுக் கொடுக்கச் செய்தனர்.

அதை எல்லாம், போட்டுடைத்து நாட்டின் பெயரை குட்டிச் சுவராக்கிக் கெடுக்கத் தயாராகி விட்டார் மைத்திரியார்.

அடுத்த தடவையும் ஜனாதிபதியாகி விட வேண்டும் என்பதற்காகத் துடியாய்த் துடிக்கிறார் அவர்.

அதற்காக தன்மை சாதனை படைத்த ஒரு ஜனாதிபதியாகக் காட்ட முயல்கின்றார்.

'புலிப் பயங்கரவாதத்தை ஒழித்தவர்' என்ற வீர மகுடத்தைத் தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்டமைபோல, தானும் ஏதேனும் சாதித்து விட்டவராகக் காட்டத் துடிக்கின்றார் அவர்.

அதற்காக அவர் எடுத்த விவகாரம்தான் போதை ஒழிப்புக்கு எதிராகத் தீவிரமாக உழைத்தவர் என்ற மகுடம்.

அதை அவர் எட்டுவதற்காக பல முன் முயற்சிகளை முன்னெடுக்கின்றார். அதில் ஒன்றுதான் போதைவஸ்து விவகாரத்தில் மரணதண்டனையை நிறைவேற்றும் அவரது முடிவு.

தனது அரசியல் இலக்குகளை – அபிலாஷைகளை – அடைவதற்காக மனித உயிர்களோடு விளையாடுகின்றார். உலகெங்கும் மரண தண்டனை நிறைவேற்றத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டு உலகம் நவநாகரிகப் பண்பியல்புகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்க, தமது அரசியல் இலக்குகளை எட்டுவதற்காக மனிதாபிமானத்துக்கு எதிரான கொடூரத்தை நோக்கி நாட்டை நெட்டித் தள்ளுகின்றார் மைத்திரியார்.

மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் தமது எதேச்சதிகாரமான நடவடிக்கை மூலம் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட மேற்குலக நாடுகளினதும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினதும் சீற்றத்துக்கும், விசனத்துக்குள்ளும் இலங்கைத் தீவை ஆழ்த்தப் போகின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமது தற்போதைய ஆட்சிக் காலத்தின் அந்தத்தில் இத்தகைய குளறுபடி நடவடிக்கைகளை அவர் முன்னெடுப்பது நாட்டுக்குப் பெரும் சாபக்கேடு.

தன்னுடைய தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை அடையும் இலக்குக்காக, இதுவரை நாற்பது ஆண்டுகளாக இலங்கைத் தீவின் தலைவர்கள் கட்டிக்காத்து வந்த பெயரை அவர் சீரழித்து விட்டுச் செல்லப் போகின்றார்.

இப்படியான ஒருவர் கையில் நாடு சிக்கியமை அதன் தலைவிதியன்று வேறில்லை.

# பயங்கரவாத ஒழிப்புச் செயற்பாட்டின்போது மனிதாபிமான அணுகுமுறை அவசியமாகும்

## வலியுறுத்துகின்றார் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, ஜூன் 29

அவசரகாலச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டாலும் எமது நாட்டின் நடைமுறை நிலைமைகளை கருத்தில் கொண்டு மனிதாபிமான அணுகுமுறையானது கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகும் என்ற எமது நிலைப்பாட்டை நான் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றில் நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான பிரேரணை தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்ட பின் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் பல்வேறு விடயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எனினும் தற்போதைய தெரிவுக்குழுவின் விசாரணைகளைப் பொறுத்த வரையில் அதன் நகர்வுகள் மேலும் அரசியல் ரீதியிலான நெருக்கடி நிலைமைக்குள் நாட்டை தள்ளி விடுமோ? என்ற அச்ச நிலைமைகளும் இல்லாமல் இல்லை.

ஒரு பாதிப்பு தொடர்பில் ஆராய்கின்றபோது அது இன்னொரு பாதிப்பை நோக்கிச் சென்றுவிடக்கூடாது என்பதில் மிக அவதானமாக இருக்க வேண்டிய தருணத்தில் இந்த நாடு இருந்து கொண்டிருக்கின்றது என்பதை முதலில் மனதில் கொள்ளவேண்டும்.

அத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணைகள் எந்தளவிற்கு நம்பகத்தன்மை வாய்ந்தது என்ற கேள்வியும் பல்வேறு தரப்பினரிடையே ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மையில் பாப்பரசரைச் சந்திப்பதற்காக வத்திக்கான் சென்றிருந்த எமது கர்தினால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அரசால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் குறித்து தனது அதிருப்தியை சர்வதேச ஊடகங்களின் முன்பாகத் தெரிவித்திருந்தார்.

இது இந்த நாடு தொடர்பான சர்வதேசத்தின் நம்பகத்தன்மை தொடர்பிலான கேள்விக்குறியானதொரு நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான காலகட்டத்தில் அரசு மீது கர்தினால் வைத்திருந்த நம்பிக்கையை கர்தினால் முற்று முழுதாகவே தற்போது இழந்திருக்கிறார் எனத் தெரியவருகின்றது. இதற்கு இந்த அரசே பொறுப்பு கூற வேண்டும் என நினைக்கின்றேன் – என்றார். (ஐ)

# இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்த ஆர்வம் காட்டுகிறது ரஷ்யா

மொஸ்கோ, ஜூன் 29

இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்த ஆர்வம் கொண்டுள்ளதாக ரஷ்யக் கூட்டுப் படைகளின் தலைவரான ஜெனரல் வலேரி ஜெராசிமோவ் தெரிவித்துள்ளார்.



மொஸ்கோநகரில்நடைபெறும் இராணுவக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் பங்கேற்கச் சென்றுள்ள இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை மொஸ்கோவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜெனரல் வலேரி ஜெராசிமோவ்,

இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும், பிராந்தியத்தில் அனைத்துலகத் தீவிரவாதத்துக்கு எதிரான போர் பற்றியும், ஏனைய பாதுகாப்பு சவால்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும், நாங்கள் ஆர்வம் கொண்டுள்ளோம்.

எங்களுக்குள் 60 ஆண்டு கால நல்லுறவு உள்ளது. தெற்காசியாவில் ரஷ்யாவின் நம்பகமான பங்காளராக இலங்கை இருக்கிறது.

அண்மையில் டுஷான்பேயில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கும், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில், எட்டப்பட்ட உடன்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

இரு நாடுகளின் ஆயுதப்படைகளுக்கு இடையிலான நட்புறவை இந்தச் சந்திப்பு வலுப்படுத்தும் என்று, நம்புகிறோம் –என்றார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தரப்பில், அட்மிரல் விஜேகுணரத்னவுடன் அவரது செயலர் கப்டன் சமரநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் மூத்த உதவிச் செயலர் ஏ.எஸ்.எஸ். குமார, விங் கொமாண்டர் விஜேசிங்க, ரஷ்யாவுக்கான தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக, மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் குறூப் கப்டன் உதித்த பியசேன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# தெரிவுக்குழுவில் முன்னிலையாக தயாசிறி மறுப்பு

கொழும்பு, ஜூன் 29

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்னிலையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அவரை நேற்றுத் தெரிவுக்குழு விசாரணைக்காக அழைத்திருந்தது. இருப்பினும், தான் ஒருபோதும் தெரிவுக்குழுவில் முன்னிலையாகப் போவதில்லை என்று தயாசிறி ஜயசேகர எம்.பி அறிவித்துள்ளார். (ஐ)

**நாளை**
30.06.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப. 9.10 வரை
திதி : திரயோதசி பி.இ 4.09 வரை
இராகுகாலம் : 4.26 – 5.56
சுப நேரம் :8.56 – 10.26

இப்போது யாழ்ப்பாணத்தில் வெளியாகி, வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பிலும் இலங்கையின் பிற இடங்களிலும், புலம் பெயர் தேசங்கள் எங்ஙனும் இலங்கை நேரப்படி அதிகாலையில் தினசரி தவறாமல் நாளிதழ் வடிவத்தில் தமிழ் மக்களை எட்டும் ஒரே பத்திரிகை

காலைக்கதிர் Kalaikathir

'வட்ஸ் - அப்', 'வைபர்', மின்னஞ்சல் மூலம் 'காலைக் கதிர்' நாளிதழை தினசரி இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்பு கொண்ட பல்லாயிரம் வாசகர்களுக்கு அணிகள் அணிகளாகப் பிரித்து அதிகாலையிலேயே அஞ்சல் செய்து வருகிறோம். விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளாதோர் அல்லது புதிதாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்

kalaikkathirpaper@gmail.com
என்ற மின்னஞ்சல் மூலம்




அல்லது
0094 - 21 - 222 3000
என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

புலம்பெயர் தேசத்தில் உள்ள பல்லாயிரம் தமிழ் மக்களையும் உங்கள் 'காலைக்கதிர்' தினசரி அதிகாலை வேளையிலேயே தவறாமல் நாளிதழ் வடிவத்தில் எட்டுவதால், மரண அறிவித்தல், நினைவஞ்சலி உட்பட பிற விளம்பரங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க காலைக்கதிரை நீங்கள் நாடலாம்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
முகாமையாளர், 'காலைக்கதிர்'
தொலைபேசி இலக்கம்
0094 - 21 - 222 3000
0094 - 776687760

# செம்மலைப் பிள்ளையாருக்கு ஜூலை 6 மாபெரும் பொங்கல்!

## ரவிகரன் அறிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூன் 29**
**செம்மலை – நீராவியடி ஏற்றம் பிள்ளையார் ஆலயத்தில் எங்கள் உரித்தை நிலைநாட்டும் வகையில் ஜூலை 6ஆம் திகதி மாபெரும் பொங்கல் விழாவை நடத்தப்போவதாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கூறினார்.**



யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளா சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

செம்மலை – நீராவியடி ஏற்ற பிள்ளையார் கோவில் மிக நீண்ட காலமாகத் தமிழ் மக்களால் வழிபடப்பட்ட ஆலயம். பின்னர் போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அந்தப் பிள்ளையார் ஆலயத்தில் இராணுவத்தினர் முகாம் ஒன்றை அமைத்து சிறிய புத்தர் சிலையையும் வைத்தனர். பின்னர் இராணுவத்தினர் உதவியுடன் அங்கு பௌத்த பிக்கு ஒருவரும் வந்து தங்கியுள்ளார்.

சிறிது சிறிதாகப் பிள்ளையார் ஆலயம் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை கட்டப்பட ஆரம்பித்தது. இதனையடுத்து பிள்ளையார் ஆலய நிர்வாகம் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த நிலையில் இரு தரப்பினரும் ஒற்றுமையாக தமது வழிபாடுகளை நடத்தலாம்.என நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

ஆனாலும் அங்குள்ள பௌத்த பிக்கு வெளிமாவட்டங்களி லிருந்து சிங்கள மக்களை அழைத்து வந்து தமிழ் மக்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதும், அச்சுறுத் தும் பாணியில் நடந்து கொள்வதுமாகப் பல பிரச்சினைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையில், எங்கள் பூர்வீகமான மண்ணில், எங்கள் வழிபாட்டுத் தலத்தில் எங்கள் உரிமையை நிலைநாட்டுவதற்காக எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி பெரும் பொங்கல் விழா ஒன்றை பிள்ளையார் ஆலய நிர்வாகத்தில் உள்ள இளைஞாகளும், பொதுமக்களும் இணைந்து ஒழுங்கமைத்திருக்கிறார்கள்.

இந்தப் பொங்கல் விழாவுக்காகச் சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, சில அடிவருடிகளால் சிங்கள மக்களுக்கு தாரைவார்த்து கொடுக்கப்பட்ட தமிழர்களின் பூர்வீகக் கிராமமான கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டங்கள் எடுத்துவரப்பட்டு பூசை வழிபாடுகளும், பொங்கல் விழாவும் இடம்பெறும் – என்றார். (ஐ)

## சகவாழ்வு – ஓர் உரையாடல் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சகவாழ்விற்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியத்தினால் சகல சமய சமூகத்தினர் பங்கு கேற்றும் சகவாழ்வு ஓர் உரையாடல் யாழ்ப்பாணத்தில் இன்றும், நாளையும் இடம்பெறும்.

இன்று சனிக்கிழமை யாழ். வேம்படி வீதி ரிம்மர் மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். சக வாழ்வினை முதன்மைப்படுத்தல், அமைப்பின் முன்னெடுப்புக்கள் மற்றும் சிறுகு நுனி அமைப்பின் குறும் படங்களும் இடம்பெறவுள்ளன.

இன்றைய உரையாடலின் தயானியோகநாதன், ஏ.எம். அஷ்பாக், கமிலா கலீல், கேஷாயினி எட்மண்ட் ஆகியோர் கலந்து கொள்வர்.

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். சென் ஜோன் த பட்டிஸ் தேவாலயத்தில் ஈஸ்டர் 2019 இன் பின்னர் இலங்கைப் பெண்களை பாதிக்கும் விடயங்கள் விளைவுகளும், உத்திகளும், சகவாழ்வு வெற்றிக் கதைகளும் சிந்தனைப் பகிர்வும், சமய மற்றும் இன எல்லைகளுக்கு அப்பாலான தோழமை உணர்வுகள் கருத்துப் பகிர்வுகளுடன் எதிர்காலத்திற்கான செயற்பாடுகள் பற்றியும் ஆராயப்படவுள்ளன.

## ஆளில்லா படகில் 19 கிலோ கஞ்சா!



*மன்னார், ஜூன் 29*

*மன்னார் – காட்டாஸ்பத்திரி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணாடி இழைப்படகு ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 19 கிலோ கேரள கஞ்சாவைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைப்பற்றினர்.*

*காட்டாஸ்பத்திரி கடற்கரையில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது சந்தேகத்துக்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகைச் சோதனையிட்டுள்ளனர்.*

*அந்தப் படகில் காணப்பட்ட பொதிகளை மீட்டுச் சோதனை செய்தபோது பொதியினுள் கேரளக் கஞ்சா காணப்பட்டுள்ளது. 9 பொதிகளில் 18 கிலோ 900 கிராம் நிறை கொண்ட கஞ்சா இருந்தது. சுமார் 19 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கஞ்சா பேசாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

*சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் பேசாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

### போதைக்கு எதிராக ஊர்வலம் நடத்திவிட்டு

# முல்லைத்தீவில் மூடிய மதுபானச்சாலையை ஆளுநர் மீளவும் திறக்க அனுமதித்தமை ஏன்?

## கணேஷ் வேலாயுதம் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 29

போதைப் பொருளுக்கு எதிரான நாளில் வாகன ஊர்வலங்களை நடத்தி பலூன்களையும் பறக்கவிட்ட ஆளுநர் முல்லைத்தீவில் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து மூடிய மதுபானசாலையை எந்த அடிப்படையில் திறந்தார்? இந்த உண்மை ஊடகங்கள் முன்னிலையில் அம்பலமாகிவிடும் என்பதாலா? அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலிருந்து ஊடகங்களை வெளியேறுமாறு கூறினார்?

– இவ்வாறு கேள்வி எழுப்பினார் மக்கள் முன்னேற்றக் கூட்டணியின் தலைவர் கணேஷ் வேலாயுதம்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளா சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

போதைப்பொருளுக்கு எதிரான நாளில் வடக்கில் வாகன ஊர்வலங்கள், பலூன்கள் பறக்கவிடும் நிகழ்வுகள் எனப் பல இடம்பெற்றன. அவற்றில் ஆளுநர் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தான் குடிப்பதை நிறுத்திவிட்டேன் எனவும் கூறியிருக்கின்றார். அப்படியானால் முல்லைத்தீவில் பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும் கடுமையாகப் போராடி மூடிய மதுபான சாலையை எதற்காக திறக்கச் சொன்னார்? இரட்டை வேடம் போடுகின்றாரா? அல்லது போதைப்பொருளுக்கு எதிராகப் பேசுவதுபோல் காட்டிக் கொண்டு மக்களை அழிக்க நடவடிக்கை நடக்கின்றதா?

ஆளுநா உண்மையாகப் போதைப்பொருளுக்கு எதிராக செயற்படுவாராக இருந்தால் ஆளுநர் முதலில் தன் அலுவலகத்துக்கு அருகில் உள்ள மதுபானச்சாலையை மூடட்டும்.

அதேபோல் யாழ்.குடாநாட்டில் பாடசாலைகளுக்கு அருகிலும், அரச திணைக்களங்களுக்கு அருகிலும், பல்கலைக்கழகத்துக்கு அருகிலும் உள்ள மதுபானச்சாலைகளை மூடட்டும் பார்க்கலாம் – என்றார். (ஐ)

# ஜப்பானில் பல நாடுகளின் தலைவர்களோடும் மோடி கூட்டாகவும் தனித் தனியாகவும் பேச்சு

**ஜப்பான் நகரான ஒசாகாவில் ஜி20 மாநாட்டுக்கு முன்பாக இந்தியப் பிரதமர் மோடி - அமெரிக்க அதிபர் டிரம்ப் - ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோரிடையே முத்தரப்பு பேச்சு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அதிபர் டிரம்ப்புடன் மோடி இருதரப்பு பேச்சு நடத்தினார். ஜி 20 மாநாடு ஜப்பானில் நேற்று ஆரம்பமான நிலையில் இந்த முத்தரப்புப் பேச்சு நேற்றுக் காலை 6 மணிக்கு நடைபெற்றது.**




பேச்சின் தொடக்கத்தில் மோடியின் மகத்தான தேர்தல் வெற்றிக்கு டிரம்ப் வாழ்த்து தெரிவித்துக் கைகுலுக்கினார். இந்த வெற்றிக்குத் தகுதியானவர்தான் நீங்கள் என்று மோடியிடம் டிரம்ப் தெரிவித்தார்.

மூன்று நாடுகளும் பொதுவான கருத்தியலை கொண்டிருப்பவை என்று கூறிய பிரதமர் மோடி, அனைவரையும் அரவணைத்துச் செல்வதே தமது அரசின் கொள்கை என்றார். ஜப்பான்–அமெரிக்கா–இந்தியாவை 'JAI'என்றும் மோடி குறிப்பிட்டார்.

வர்த்தகம்,பாதுகாப்பு,தீவிரவாதம் உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்து இந்த பேச்சில் விவாதிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மோடி–டிரம்ப் இடையே இருதரப்பு பேச்சு நடைபெற்றது. அமெரிக்காவுடன் இந்தியா மேற்கொண்ட உறுதிமொழிகள் கடைபிடிக்கப்படும் என்று மோடி தெரிவித்துள்ளார்.

ஈரான் விவகாரம், 5 ஜி தொழில்நுட்பம், பாதுகாப்பு



ஒப்பந்தங்கள், வர்த்தக உறவுகள் உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டன.

ஜி 20 மாநாடுகளின் தொடக்கத்தில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு கூடியது.

இதில் கலந்து கொண்ட பிரதமர் மோடி ரஷ்ய அதிபர் புடின் , சீன அதிபர் சீ ஜின்பிங் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேச்சில் ஈடுபட்டார். டிஜிட்டல் பொருளாதார பரிவர்த்தனை போன்ற முக்கிய விவகாரங்கள் இந்த பேச்சில் இடம்பெற்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய பிரதமர் மோடி டிஜிட்டல் பணபரிவர்த்தனையில் உலக அளவில் நீடிக்கும் பாதுகாப்பு பிரச்சினைகளை சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதம் மனித குலத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது என்றும் மோடி தமது உரையில் குறிப்பிட்டார். தீவிரவாதத்திற்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மோடி வலியுறுத்தினார். பிரிக்ஸ் நாடுகள் தீவிரவாதத்தை ஒழிக்க ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்றும் மோடி கோரிக்கை விடுத்தார்.

### முன்னர் ஒன்று சேர்ந்து கார் தயாரித்த

## ஜப்பானும் இந்தியாவும் இணைந்து தற்போது புல்லட் ரயில் உருவாக்கம்

### இந்தியர் மத்தியில் மோடி பெருமித உரை



கோபே,ஜூன்29

இந்தியா – ஜப்பான் உறவு வலுவாகிறது என்று ஜப்பான் வாழ் இந்தியர்கள் மத்தியில் பேசுகையில் இந்தியப் பிரதமர் மோடி கூறினார்

ஜப்பானில் ஒசாகா நகரில் நேற்றுத் தொடங்கிய ஜி–20' உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றுள்ள பிரதமர் மோடி நேற்று முன்தினம் கோபே நகரில் ஜப்பான் வாழ் இந்தியர்கள் மத்தியில் பேசினார்.

அப்போது அவர் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமராக இருந்த வாஜ்பாய், ஜப்பான் பிரதமராக இருந்த யோசிரோ மோரியை சந்தித்து பேசியபோது, இரு நாட்டு உறவு உலகளாவிய கூட்டமாக மாறியதாக நினைவுகூர்ந்தார்.


தொடர்ந்து அவர் பேசும்போது, புதிய இந்தியாவில் இரு நாட்டு உறவு மேலும் வலுவடைகிறது என கூறினார்.

சமீபத்தில் இந்தியாவில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜப்பான் வாழ் இந்தியர்களின் பங்களிப்புக்காக அவர் நன்றி தெரிவித்தார்.

மேலும் இந்தியாவும், ஜப்பானும் இணைந்து ஒரு காலத்தில் கார் தயாரித்த நிலையில், இப்போது புல்லட் ரயிலை உருவாக்குவதாக அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

## பயங்கரவாதத்தால் மனித குலத்துக்கு பெரும் அச்சுறுத்தல்

### 'பிரிக்ஸ்' தலைவர்களிடையே பிரதமர் மோடி எடுத்துரைப்பு



ஒசாகா,ஜூன்29

பயங்கரவாதம் மனித குலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

ஜி 20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜப்பான் சென்றுள்ள பிரதமர் மோடி ஒசாகா நகரில், 'பிரிக்ஸ்' அமைப்பு தலைவர்கள் அதிகார பூர்வமற்ற முறையில் கூடி ஆலோசனை நடத்தினர். பிரதமர் மோடி, சீன அதிபர் ஜி ஜிங்பிங், ரஷ்ய அதிபர் புடின், பிரேசில் அதிபர், தென்னாபிரிக்க அதிபர் ஆகியோர் ஆலோசனை நடத்தினர். அப்போது, பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் மத்தியில் பேசிய மோடி, பயங்கரவாதம் மனித குலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது – என்றார்.

பயங்கரவாதத்தால், அப்பாவி மனித உயிர்கள் பலியாகின்றமையோடு, பொருளாதார வளர்ச்சி, மத நல்லிணக்கம் ஆகியனவும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. பயங்கரவாதத்துக்கு கிடைக்கும் ஆதரவை நாம் தடுத்த நிறுத்த வேண்டும். பயங்கரவாதத்தை தடுக்க பிரிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைந்து போராட வேண்டிய தருணம் இது. இவ்வாறு அவர் அங்கு மேலும் கூறினார்.

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை; இப்போதைக்கு பின்வாங்கியது தி.மு.க.

சென்னை,ஜூன்29

தமிழக சட்டசபையின் சபாநாயகருக்கு எதிராகத் தாங்கள் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தொடர்ந்து முன்னெடுக்கும்படி வலியுறுத்த மாட்டோம் என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக சட்டப்பேரவையின் கூட்டத்தொடர் நேற்றுத் தொடங்கியது.

முதல்நாளான நேற்று மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. இதையடுத்து, நாளை மறுதினம் திங்கட்கிழமை அவை மீண்டும்



கூடும் என்று சபாநாயகர் தனபால் அறிவித்தார்.

சபாநாயகர் தனபாலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஜூலை முதலாம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வலியுறுத்தப் போவதில்லை என்று தி.மு.க. தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மு.க. ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் –

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்று சபாநாயகர் தனபாலிடம் கடிதம் கொடுத்துள்ளோம்.

அன்றைய சூழலில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரக் கடிதம் கொடுத்தோம். இப்போதைக்கு அதை வலியுறுத்தப் போவதில்லை– என்றார்.

# ஈரான் விவகாரத்தில் தனது நிலைப்பாடு மிகவும் உறுதியானது என்கிறார் டிரம்ப்!

ஈரான் விவகாரத்தில் தனது நிலைப்பாடு மிகவும் உறுதியானது என ஜப்பானில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

வல்லரசு நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையே 2015ஆம் ஆண்டில் கையெழுத்தான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகுவதாக அதிபர் டிரம்ப் கடந்த ஆண்டு அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, அந்த ஒப்பந்தம் காரணமாக விலக்கப்பட்டிருந்த ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அவர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார். அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்களால் அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வந்த சூழலில், அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானத்தை ஈரான் கடந்த வாரம் சுட்டு வீழ்த்தியது.

அதற்குப் பதிலடியாக ஈரான் மீது வான்வழித் தாக்குதல் நடத்த டிரம்ப் உத்தரவிட்டு, பிறகு அந்த உத்தரவை வாபஸ் பெற்றார். எனினும், ஈரான் மதத் தலைவர் அயதுல்லா கமேனி, வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜரீஃப் மற்றும் அந்த நாட்டு ராணுவ உயரதிகாரிகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதாக அமெரிக்கா அறிவித்தது. இந்தத் தடைகள் மூலம் சமாதானப் பேச்சுக்கான பாதையை அமெரிக்கா அடைத்துவிட்டதாக ஈரான் அதிபர் ஹஸன் ரௌஹானி சாடியிருந்தார்.

ஈரான் அணுஆயுதத் திட்டத்துக்கு பயன்படுத்தும் கணினிகளை அமெரிக்க இராணுவ இணையதள வல்லுநர்கள் முடக்கி வருகின்றனர். இதனால், அந்நாடு தொடர்ந்து அணுஆயுதத் தயாரிப்பில் ஈடுபட முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானின் அணுஆயுதத் திட்டங்கள் மட்டுமல்லாது அந்நாட்டின் ஏவுகணைகள், ராக்கெட்டுகள் உள்ளிட்டவையையும் முடக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.



ஜப்பான் உரையில் அவர் தெரிவிப்பு

ஈரானுடன் போர் ஏற்படாது என்றே நான் நம்புகிறேன். அப்படி ஒரு போர் ஏற்பட்டால், அமெரிக்கா எளிதில் வெற்றி பெற்றுவிடும். காரணம், ஈரானைவிட அமெரிக்கா மிகவும் வலிமை வாய்ந்தது. இந்தப் போரில் அமெரிக்காவின் நிலை மிக வலுவானதாக இருக்கும். எனவே, மிகக் குறுகிய காலத்தில் அந்தப் போர் நிறைவடைந்துவிடும். அதற்காக, அமெரிக்க ராணுவ வீரர்களை ஈரானுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இருக்காது – என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில், ஜப்பானின் ஒசாகா நகரில் ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த டிரம்ப் நேற்று வெள்ளிக்கிழமை கூறியவை வருமாறு:-

ஈரான் விவகாரத்தில் நான் கடந்த 3 தினங்களாக கூறிவருவதுதான் எனது நிலைப்பாடு. இதில் போதிய கால அவகாசம் உள்ளதால் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க வேண்டியதில்லை. அனைத்தும் சுமுகமாக முடியும் என்று நம்புகிறேன். – என்று தெரிவித்தார்.

## போயிங் '737' ரக விமானத்தில் புதிதாகக் குறை கண்டுபிடிப்பு!



சர்ச்சைக்குரிய போயிங் '737 மேக்ஸ்' ரக விமானத்தில் புதிதாக ஒரு குறையை கண்டறிந்துள்ளதாக அமெரிக்க விமானப் போக்குவரத்து நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தொடர் விபத்துகள் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் போயிங் 737 மேக்ஸ் விமானங்களின் சேவை நிறுத்தப்பட்டது.


இந்நிலையில் அந்த விமான ரகத்தின் கட்டுப்பாட்டு அமைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் போயிங் நிறுவனம் ஈடுபட்டு வந்தது.

முன்னதாக அந்த விமானத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களைச் சோதனை செய்த பிறகு, அவற்றின் சேவையை மீண்டும் தொடங்க அனுமதி அளிக்கப்படும் என்று அமெரிக்க விமானப் போக்குவரத்து நிர்வாகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சமீபத்தில் நடத்தப்பட்ட சோதனையில் போயிங் 737 விமானத்தில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் குறை ஒன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்க விமான போக்குவரத்து நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஆனால் அது என்ன குறை என்பது வெளியாகவில்லை.

## ஐரோப்பாவை உலுக்கும் கடுமையான வெப்பம்!

### அனல் வீச்சில் இருந்து வயோதிபர்களையும் குழந்தைகளையும் பாதுகாக்க நடவடிக்கை





பாரிஸ், ஜூன் 29

பிரான்ஸ் உட்பட ஐரோப்பாவின் பெரும் பகுதிகளைக் கடும் வெப்பம் வறுத்தெடுக்கிறது. வழமைக்கு மாறாக கோடை விடுமுறைக்கு முன்னரே ஏற்பட்டிருக்கும் 'காண்டாவன' வெப்பம் பல நாடுகளிலும் இயல்பு வாழ்வைச் சீர்குலைத்திருக்கிறது. ஆபிரிக்காவின் சஹாராவில் இருந்து உருவெடுத்துவரும் வெப்ப அனல் காற்றே ஐரோப்பாவில் இந்த இயற்கை அனர்த்தத்தை உருவாக்கிவிட்டிருப்பதாக வானிலை அவதானிகள் கூறுகின்றனர். 'வருகின்றது நரகம்' (Hell is coming) என்று ஊடகங்கள் இந்த அனல் காற்றின் வருகைக்குத் தலைப்பிட்டுள்ளன.

ஸ்பெயின், ஜேர்மனி, இத்தாலி, சுவிஸ், செக் குடியரசு உட்பட பல நாடுகளில் வெப்பத்தின் தாக்கம் உணரப்படுகிறது.

பிரான்ஸிற்கு மேலே வாய் பிளந்து அலறும் மண்டை ஓட்டினை ஒத்த வடிவத்தில் வெப்ப அனல் நிலைகொள்வதைக் காட்டும் வானிலைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருக்கின்றன. அண்மைக்கால வரலாற்றில் தாங்கள் அவதானித்திராத அதிர்ச்சியூட்டும் காட்சி இது என்று வானிலை வல்லுநர்கள் பதிவிட்டிருக்கின்றனர்.

பிரான்ஸில் பெரும்பாலும் நாடு முழுவதும் சுமார் 40 பாகை (104 பரனைட்) வெப்பம் உணரப்படுவதால் அவசரகால தற்காப்பு நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய அனல் வீச்சில் இருந்து வயோதிபர்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கு உள்ளூர் அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

பாரிஸ் புறநகர்ப் பகுதிகள் அடங்கலாக நாடு முழுவதும் 225 மாநகரசபைப் பிரிவுகளில் ஆரம்பப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பள்ளிகளின் வெளிக்களப் பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. முக்கிய பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. கோடை விடுமுறையை வரவேற்கும் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் பலவும் கூட ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வார இறுதியில் நடைபெறவிருந்த தமிழ்ச்சோலைப் பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள் அடுத்த வாரத்துக்குத் தள்ளிப்போடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகக்கூடிய வெப்ப நிலையாக 40.9 பாகை செல்சியஸ் நாட்டின் தெற்குப்பகுதியில் கார்ட் என்னும் இடத்தில் பதிவாகி உள்ளது. வெள்ளிக்கிழமை சுமார் 45 பாகை வரை வெப்பம் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2003 இல் சுமார் 15 ஆயிரம் உயிரிழப்புகளுக்கு காரணமான கடும் வெப்பத்துக்குப் பின்னர் நாடு எதிர்கொள்ளும் மிக மோசமான நிலைமை இது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ரஷ்யாவில் அவசரமாகத் தரை இறங்கிய விமானம் கட்டடத்தில் மோதி விபத்து!

### விமானி உட்பட 2 பேர் பலி; 46 பேர் பத்திரமாக மீட்பு

ரஷ்யாவில் விமானம் ஒன்று அவசரமாகத் தரையிறங்கியபோது கட்டடத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் விமானி உள்பட 2 பேர் உடல் கருகி உயிர் இழந்தனர்.



ரஷ்யாவின் பிரியாத்தியா பிராந்தியத்தில் உள்ள நில்நியான்கார்ஸ்க் நகர விமான நிலையத்தில் இருந்து பிராந்திய தலைநகர் யூலன் ஊடேவுக்கு நேற்று அதிகாலை பயணிகள் விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. விமானத்தில் 43 பயணிகள் உள்பட 48 பேர் இருந்தனர்.

விமானம் பறக்க தொடங்கிய சில நிமிடங்களில் திடீரென ஒரு என்ஜின் செயலிழந்தது. இதையடுத்து உடனடியாக விமானம் நில்நியான்கார்ஸ்க் விமான நிலையத்துக்கு திருப்பப்பட்டது. அங்கு விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

அப்போது ஓடுபாதையில் இருந்து சறுக்கி 100 மீற்றர் தூரத்துக்கு சென்ற விமானம், அங்கு உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு கட்டடத்தின் மீது மோதி தீப்பிடித்தது. விமான நிலையத்தில் இருந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து செயல்பட்டு தீயை அணைத்தனர்.

எனினும் இந்தக் கோர விபத்தில் விமானி மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் என 2 பேர் உடல் கருகி உயிர் இழந்தனர். பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

# பூமித்தாயின் சீற்றத்தால் மனித குலத்துக்கு கேடு!

## அனைவரும் சிந்தித்துச் செயற்பட்டால் பருவகாலங்களில் மழை பெய்யும்! நிலத்தடி நீர் உயரும்; நாடு செழிப்புறும்!!




உலகம் முழுவதும் வசிக்கும் மனிதர்களின் தவறுகளினாலும், தொழில் புரட்சிக்கு பிந்தைய அபரிமிதமான தொழில்களின் பெருக்கத்தாலும் காற்று மாசடைவது, புவி வெப்பமடைவது என இரு நிகழ்வுகள் போட்டி போட்டுக் கொண்டு நடைபெறுகின்றன.

இதனால், இயற்கையோடு இயைந்த மித மான தட்பவெப்பம், மிதமான ஈரப்பதம், இயற்கையான மழைப் பொழிவு ஆகிய வற்றை நமக்கு இலவசமாக வாரி வழங்கிய பூமித் தாய், தம் கோபப் பார்வையை மனித குலத்தை நோக்கி வீசத்தொடங்கிவிட்டது. அதன் தொடர் விளைவுகளாக பல்வகை நிலம் வாழ் மற்றும் கடல்வாழ் உயிரினங்களும், வன விலங்குகளும், கால்நடைகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

உலகம் முழுதும் நிலக்கரி பயன்பாடு தொடர்வது, பெற்றோல்- டீசல் உலகளவில் 24 மணிநேரமும் தொடர்ந்து பயன்படுத்துவது, நெகிழிப் பொருள்கள், குப்பைகள், மருத்துவக் கழிவுகள், எலக்ட்ரானிக் கழிவுகள், பயன்படுத்தப்பட்ட டயர்களை பொது இடங்களில் எரித்தல், மீதமாகும் உணவுப் பொருள்களை பொது இடங்களில் வீசுதல், , செயற்கையான வீரியமுள்ள நைட்ரஜன், யூரியா, பொட்டாஷியம் போன்ற உரங்களை பயிர்களுக்குப் பயன்படுத்துதல், பூச்சிக்கொல்லி மருந்துகளை பயிர்கள் மீது அடிப்பது, குளு குளு பெட்டிகள்-ஏ.சி. இயந்திரங்களை தொடர்ந்து பயன்படுத்துவதால் பசுமையில்ல வாயுக்களான கார்பன்-டை- ஒக்ஸைட், மீத்தேன், நைட்ரஸ் ஒக்ஸைட், ஹைட்ரோஃப்ளுரோ கார்பன்ஸ், சல்ஃபர் ஹெக்ஸாஃப்ளுரைட், நைட்ரஜன் ஆகியவற்றின் தாக்கம் காரணமாக வளி மண்டலம் பாதிப்புக்குள்ளாகி புவி வெப்பமடைதல், காற்று மாசுபாடு அடைதல் ஆகியவை ஏற்படுகின்றன.

இத்தகைய மாசு தடை ஏதுமின்றி வளி மண்டலத்தை அடைகின்றன. வளி மண்டலத்தில் ஏற்கெனவே கெடுதல் ஏதும் தராத ஹைட்ரஜன் 78%, ஒக்ஸிஜன் 20% ஆகியவற்றுடன் மனித குலத்துக்கு தீமை செய்யும் 2% பசுமையில்ல வாயுக்களும் கலந்துள்ளன. ஏற்கெனவே வளிமண்டலத்தில் உள்ள 2% பசுமையில்ல வாயுக்களோடு தொடர்ந்து உலகம் முழுவதும் வெளியாகும் பசுமையில்ல வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்வதே புவி வெப்பமடையவும், காற்று மாசடைவதற்கும் முக்கிய காரணம். வானில் கருமேகங்கள் சூழ்ந்தாலும், அவற்றைக் கலைக்கக்கூடிய விஷ வித்துக்களாக விளங்குவது இந்தப் பசுமையில்ல வாயுக்களே.

பசுமையில்ல வாயுக்களைக் கட்டுப்படுத்த சில தீர்வுகள் உள்ளன. மின் உற்பத்திக்கு நிலக்கரி பயன்பாட்டைத் தவிர்த்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைகளான காற்றாலை மின்சாரம், சூரியஒளிமின்சாரம், கடல் அலை மின்சார முறைக்கு மாறுவது, எத்தனால் கலந்த பெற்றோல், பயோ டீசலை உபயோகிப்பது, லண்டன், சீனாவைப் போன்று குறைந்த தொலைவு பயணத்துக்கு மிதிவண்டியைப் பயன்படுத்துதல், தேவையற்ற பொருள்களை பொது இடங்களில் எரிக்காமல் இருப்பது, மருத்துவக் கழிவுகளை அழிக்க இன்சினரேட்டர்களை அனைத்து இடங்களிலும் பயன்படுத்தவது உள்ளிட்டவை தீர்வுகளாகும்.



ஜெனீவாவில் உள்ள உலகத் தலைமையக வானிலை ஆராய்ச்சி மையத்தில் குளோரோப்ளோரோகார்பனைக் கட்டுப்படுத்த குளு குளு பெட்டிகள், ஏ.சி. இயந்திரங்களைப் பயன் படுத்துவது இல்லை; மேலும், இந்த மையத்தில் வெப்பத்தைக் குறைக்கும் வகையில் பணியாளர்கள் உள்ளே நுழையும்போது விளக்குகள் எரியும்படியும், அலுவலகத்திலிருந்து வெளியேறும்போது விளக்குகள் அணையும்படியான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனீவா வானிலை ஆராய்ச்சி மையம் போன்று, உலக அளவில் குளு குளு பெட்டிகள்-ஏ.சி. இயந்திரங்களின் பயன்பாட்டை தேவைக்கு ஏற்ப குறைத்துக் கொண்டால்



மேலே குறிப்பிட்ட ஆறு பசுமையில்ல வாயுக்களின் தாக்கம் பெருமளவு கட்டுப்படுத்தப்படும். இவ்வாறு கட்டுப்படுத்தப்படும் நிலையில், ஏற்கெனவே படிந்துள்ள பசுமையில்ல வாயுக்களின் வீரியம் குறைந்து, காற்று மாசடைதல் மற்றும் புவி வெப்பமயமாதல் படிப்படியாகக் குறையும்.

இதன் தொடர்ச்சியாக முந்தைய காலங்களைப் போன்று இந்தியா உள்பட உலகம் முழுவதும் உரிய பருவ காலங்களில் மழைப் பொழிவு இருக்கும். குறிப்பாக, வறட்சியால் வாடும் தமிழகத்தில் ஆண்டுதோறும் மழைப் பொழிவு ஏற்படும். ஆண்டு முழுவதும் தொடர்ந்து சீமைக் கருவேல மரங்களை அகற்றி, ஏரிகளையும் குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும்.

மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை உறுதியுடன் அரசு செயல்படுத்துவது அவசியம்.

உலக வெப்பமயமாதல் விளைவாக மழைப் பொழிவு இல்லாததால் தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் நிலத்தடி நீர் மட்டம் அதலபாதாளத்துக்குச் சென்றுள்ளது. பசுமையில்ல வாயுக்களின் தாக்கத்தைக் குறைத்து ஆண்டுதோறும் மழைப் பொழிவு ஏற்படும் நிலையில் நிலத்தடி நீர் மட்டம் உயரும் நிலை ஏற்படும். மேலும், நாடு முழுவதும் பருவமழை தவறாத நிலையில் மாநிலங்களுக்கு இடையே உள்ள நதி நீர்ப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும்.

**நன்றி: தினமணி**

---

# ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, ஜூன் 29

ரயில் தொழிற்சங்கத்துக்கு எதிராக இலங்கை ரயில் திணைக்களம், கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்திருக்கும் நிலையில் ரயில்வே தொழிற்சங்கம் வேலை நிறுத்தம் செய்துள்ளமைக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

நிறுவனத்தின் பிரதானி என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்துக்கு அமைவாக 07 விடயங்களின் கீழ் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ கூறினார். (ஐ)

---

13 வருட உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித் திட்டம்

# யாழ். மத்தி, முத்துத் தம்பி, சோமஸ்கந்தாவில் க.பொ.த (உ/த) தொழிற்றுறை பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத் திற்குட்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, முத்துத்தம்பி மகாவித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 13 வருட உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் 2019 (க.பொ.த.உ.த தொழிற்றுறைப் பிரிவு) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்திற் குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் 2018 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடங்களிலும் க.பொ.த.சா/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தொழிற்றுறைப் பிரிவில் இணைந்து கற்க முடியும் இவர்களுக்கு பாட நிறைவின்போது N.V.Q-04 சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை குறித்த பாடசாலைகளில் பெற்று இணைந்து கற்க முடியும். கல்வி அமைச்சினால் இலங்கையின் அனைத்து மாணவர்களினதும் கல்வி உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கிலான சாதாரண தரப் பரீட்சையின் வெற்றி தோல்வியைப் பொருட்படுத்தாது உள்வாங்கப்படக் கூடிய புதிய தொழில்முறைப் பாடத்துறை இவையாகும். இதன் மூலம் மாணவர்கள் –

★ அறிவு, திறன், மனப்பாங்கு அபிவிருத்தி

★ தொழில்நுட்ப தொழில்முறை மற்றும் சமூகத் திறன்களின் மேம்பாடு.

★ சுய அபிமானமற்றும் ஆளுமை அபிவிருத்தி

என்பவற்றுடன் வெற்றிகரமான இலங்கைக் குடிமகனாக திகழ்வதற்கு உரிய சந்தர்ப்பத்தை இப்பாட நெறிகள் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

# திருக்கேதீஸ்வர ஆலய வளைவு எதிர்ப்பின் பின்னணியில் மன்னார் எம்.பிக்கள் இருவர்

## மறவன்புலவு சச்சி பரபரப்புக் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 29**
**மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு அண்மையாக வளைவு அமைக்கப்படுவதற்குத் தெரிவிக்கப்படும் எதிர்ப்பின் பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் எம்.பிக்கள் இருவர் இருக்கிறார்கள் எனப் புதிய குண்டை போட்டுள்ளார் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்.**
**அவர் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,-**

சமயங்களிடையே நல்லிணக்கம் வேண்டும் அன்பில் திளைக்க வேண்டும் அறம் செழிக்கவேண்டும் அருள் பெருக வேண்டும் என நல்ல நோக்கங்கள் கொண்டவர்கள் மாந்தை மேற்குப் பிரதேச சபையினர்.

திருக்கேதீச்சரத்திற்குச் செல்லும் சாலை மாந்தைச் சந்தியில் அந்தச் சாலைக்குப் பெயரே திருக்கேதீச்சரம் சாலை.

கற்குளத்துக்குச் செல்லும் சாலைச் சந்தியில் கிருத்தவ வரவேற்பு வளைவு. மடுமாதா அருட் கோயிலுக்குச் செல்லும் சாலைச் சந்திப்பில் கிருத்தவ வரவேற்பு வளைவு. கற்குளத்திலே சைவக்கோயில்கள் உள்ளன. மடுப் பிரதேசத்திலே சைவக் கோயில்கள் உள்ளன. ஆனாலும் சந்திப்பில் கிறித்தவ வரவேற்பு வளைவுகள்.

சைவக்கோயில்கள் உள்ளே கிராமங்களில் இருக்கின்றமையால் அந்த வரவேற்பு வளை வுகளுக்கு முன்பு பிள்ளையார் கோயிலையோ முருகன் கோயிலையோ எவரும் கட்டவில்லை. இது சைவ சமய நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டுகள்.

ஆனால் தலைமன்னார் நெடுஞ்சாலையில் திருக்கேதீச்சரத்துக்கான சைவ வரவேற்பு வளைவுக்கு முன்னே கிருத்தவ லூர்து அம்மாளுக்குச் சிறிய கோயில்! என்ன கொடுமை?

நல்லிணக்கத்தைப் பேணும் மாந்தை மேற்குப் பிரதேசசபையின் தீர்மானம். மாந்தைச் சந்தியில் திருக்கேதீச்சரம் சாலையில் நிலையாக அழகான சைவ வரவேற்பு வளைவு கட்டுவதற்குத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை உரிமம் வழங்கும் தீர்மானம்.

உறுப்பினர்களாகச் சைவர்கள் கிறித்தவர்கள் முகமதியர்கள் மாந்தைப் பிரதேச சபையில் உள்ளனர். ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

அந்தோ தலையிட்டனர் கத்தோலிக்கர். ஆயர் ஆலோசனை வழங்குகிறார். தொடர்பே இல்லாத நானாட்டான் பிரதேச சபை சைவ வரவேற்பு வளைவு கட்ட வேண்டாம் எனத் தீர்மானம் இயற்றுகிறது.



மாந்தையில் மிகச் சிறுபான்மையினராக வாழ்கின்ற கத்தோலிக்கரின் கிராம முன்னேற்றச் சங்கமும் அவ்வாறான தீர்மானத்தை இயற்றுகிறது. கிராம முன்னேற்றச் சங்கத்தின் தீர்மானத்தில் எழுதிய வரிகள் அப்பட்டமான வரலாற்றுத் தவறுகள் கொண்ட வரிகள். கற்பனைச் செய்திகளை வரலாறாக எழுதிக் கொடுத்தவர் ஆயர் இல்லத்தில் உள்ளவர்கள் போலும்!

அதைவிடக் கொடுமை என்னவென்றால் மாந்தைச் சைவ வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்ற இருவர் ஆயருக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள். திருக்கேதீச்சரம் சாலை முகப்பில் சைவ வரவேற்பு வளைவு அமையக்கூடாது என உறுதியாக இருக்கிறார்கள்.

சைவ வாக்காளரின் வாக்குகளைப் பெறும் போது பல்லிளித்துப் பெற்றீர்களே, நகைமுகம் காட்டிப் பெற்றீர்களே. இன்று அந்த வாக்காளர்களுக்குப் பச்சைத் துரோகம் செய்கிறீர்களே. மாந்தைப் பிரதேசசபையின் மதநல்லிணக்க முயற்சியை முறியடிக்கிறீர்களே.

செல்வம் அடைக்கலநாதனும், சாரள்சு நிர்மலநாதனும் திருக்கேதீச்சரம் சாலை முகப்பில் சைவ வரவேற்பு வளைவு வைக்கக்கூடாது என ஆயருக்குப் பக்கபலமாக மாந்தைப் பிரதேச சபைக்குச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை இணையத் தளங்களில் படிக்கும் பொழுது நெஞ்சு வெடிக்கிறது. மனம் துடிக்கின்றது. கொடுமையின் முகங்களைக் காண்கிறேன்.

சிங்களப் பெரும்பான்மையினர் தமிழ்ச் சிறுபான்மையினருக்குக் கொடுமை விளைவிக்கிறார்கள் என உலகெங்கும் கூறிய ஆயர் இராயப்புவின் வழித்தோன்றல்கள் அவரின் விதப்புரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களானோர் இன்று கத்தோலிக்கப் பெரும்பான்மையினரின் கொடும் பிடியை இறுக்கிச் சைவச் சிறுபான்மையினரை நசுக்குகிறார்கள் மன்னார் மாவட்டத்தில்.

சைவர்களே விழித்தெழுங்கள். மன்னார் மாவட்டத்தில் சைவர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனாலே உங்களுடைய வலிமை பெருகும். உங்கள் கோயில்களுக்கு நீங்கள் வளைவுகளை அமைக்கலாம். உங்கள் வழிபாட்டிடங்களில் இயல்பாக நீங்கள் வழிபட்டு அருள் பெருக்கலாம் அன்பை வியக்கலாம் அறத்தைப் பரப்பலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## படகு மூலம் நாடு திரும்பிய மூவர் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மூன்று பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். நெடுந்தீவு குவிந்தகாடு கடற் பிரதேசத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என இலங்கைக் கடற்படை கூறியுள்ளது.

மீன்பிடிப் படகு மூலம் இலங்கைக்கு வந்த போது, கைது செய்யப்பட்ட மூன்று பேரும் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மைத்திரியின் 'மரண தண்டனை' முடிவுக்கு வலுக்கிறது எதிர்ப்பு!

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதியின் யோசனைக்கு மேற்குலக நாடுகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய நான்கு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கும் உத்தரவில் தான் கையொப்பமிட்டுள்ளார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த புதன்கிழமை அறிவித்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனப் பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாடுகள் நேற்று முன் தினம் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளும் மைத்திரியின் 'மரண தண்டனை' முடிவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

மரண தண்டனை மீண்டும் நடைமுறைப் படுத்தப்படுமானால் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கூட இரத்து செய்யப்படலாம். என அமைச்சர் ஜோன் அமரதுங்க சுட்டிக் காட்டினார். (ஐ)

## கோட்டாவுக்கு ஆதரவு இல்லை

கொழும்பு, ஜூன் 29




அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்டால் அதற்கு தான் ஒருபோதும் ஆதரவு வழங்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணையத்துக்கு எதிராக குமார வெல்கம தாக்கல் செய்த திருத்த மனு தொடர்பாக கொழும்பு நீதிமன்றத்துக்கு வருகை தந்த அவர், பின்னர் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் குறித்து தனது நிலைப்பாட்டை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்தே தெரிவித்து வருகிறார் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

கொலையுடன் தொடர்புபட்ட நபர் இருப்பாராக இருந்தால், அந்த நபர் கொலை செய்தவர் என்று மக்களிடம் கருத்து நிலவுமானால் அவருக்கு ஒரு போதும் தான் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை.

அத்தோடு அனைத்து அரசும் தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக கொலைகளைச் செய்துள்ளன – என்றார். (ஐ)



## தூக்குத் தண்டனை தவறு என உணர ஜனாதிபதிக்கு 4 ஆண்டுகள் தேவை

### கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன் 29

மரண தண்டனை முடிவு பிழையானது என உணர்ந்துகொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு என்னும் 4 ஆண்டுகள் தேவைப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்து தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, 19 ஆவது திருத்தத்தை ஜனாதிபதியே ஆதரித்தார் ஆனால் அது தவறு என புரிந்துகொள்ள அவருக்கு 4 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

தற்போது மரண தண்டனையை மீண்டும் விதிக்கவேண்டும் வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். இதுவும் பிழையான முடிவு என உணர்ந்து கொள்ள அவருக்கு மேலும் 4 ஆண்டுகள் தேவைப்படலாம் எனப் பதிவிட்டுள்ளார்.

19 ஆவது திருத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடாகும் என தெரிவித்த ஜனாதிபதி, இது தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



காலைக்கதிர்
Kalaikathir



# மேற்கிந்தியத் தீவுகளின் அரையிறுதி வாய்ப்பை தட்டி பறித்தது இந்தியா!



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில், இந்திய அணி 125 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 34ஆவது போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி, கட்டாய வெற்றியை நோக்கிக் களமிறங்கியது.

இப்போட்டியில் தோல்வியடைந்தால் தொடரிலிருந்து வெளியேற நேரிடும் என்ற நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது.

இரசிகர்களின் எதிர்பார்ப்பை எகிற வைத்திருந்த இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய இந்தியா அணி, 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது முதல் விக்கெட்டை இழந்தது.

இதன்போது அணியின் ஆரம்ப அதிரடி துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களம்புகுந்த அணித்தலைவர் விராட் கோஹ்லி, மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான கே.எல். ராகுலுடன் இணைந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடினார்.

இருவரும் இணைந்து 69 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்த வேளை, கே.எல். ராகுல், 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து விஜய் சங்கர், விராட் கோஹ்லியுடன் ஜோடிசேர்ந்தார். எனினும் விஜய்சங்கரால் அணிக்கு பெரிதான பங்களிப்பை வழங்க முடியவில்லை.

அவர் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய கேதர் ஜாதவ் 7 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதன்பிறகு களம்புகுந்த டோனி, விராட் கோஹ்லியுடன் இணைந்து நிதான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால் விராட் கோஹ்லி 72 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ஹார்திக் பாண்ட்யா, டோனியுடன் ஜோடி சேர்ந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.

அவரும் 46 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களம்புகுந்த மொஹமட் ஷமி ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஓய்வறை திரும்பினார்.

நிதான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி இறுதி வரை களத்தில் நின்ற டோனி, ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். குல்தீப் யாதவ் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் மறுமுனையில் களத்தில் இருந்தார்.

இதற்கமைய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 268 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சு சார்பில், கெமார் ரோச் 3 விக்கெட்டுகளையும், செல்டோன் கொட்ரெல் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 269 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 4.5ஆவது ஓவரில் 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது முதல் விக்கெட்டை இழந்தது.

அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல், 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய சாய் ஹோப் 5 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதன்பிறகு களமிறங்கிய நிக்கோலஸ் பூரான், ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சுனில் அம்ப்ரிஸ்ஸுடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

இருவரும் இணைந்து 55 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த வேளை, சுனில் அம்ப்ரிஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பிறகு நிக்லோஸ் பூரானும் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி, கடும் நெருக்கடிக்குள்ளானது.

இதனையடுத்து, சிறப்பாகத் துடுப்பெடுத்தாடக் கூடிய வீரர்கள் அணியில் இருந்தாலும், அவர்களால் அணிக்கான சிறப்பான பங்களிப்பை வழங்க முடியவில்லை.

அடுத்தடுத்து களமிறங்கிய ஜேஸன் ஹோல்டர் 6 ஓட்டங்களுடனும், கார்லோஸ் பிரத்வெயிட் 1 ஓட்டத்துடனும், பெபியன் அலென் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், கெமார் ரோச் 14 ஓட்டங்களுடனும், செல்டோன் கொட்ரெல் 10 ஓட்டங்களுடனும், ஒசேன் தோமஸ் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி, 34.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணி, 125 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது இந்திய அணியின் பந்து வீச்சு சார்பில், மொஹமட் ஷமி 4 விக்கெட்டுகளையும், ஜஸ்பிரிட் பும்ரா மற்றும் யுஸ்வேந்திர சஹால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஹார்திக் பாண்ட்யா மற்றும் குல்திப் யாதவ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் சாய்த்தனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, இந்திய அணி சார்பில், 82 பந்துகளில் 8 பவுண்ரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி, அரையிறுதிக்கான வாய்ப்பினை பிரகாசப்படுத்தியது. மறுமுனையில் தோல்வியடைந்த மேற்கிந்திய தீவுகள் அணி, மூன்றாவது அணியாக உலகக்கிண்ண தொடரின் அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

இதற்கு முன்னதாக ஆப்கானிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் உலகக்கிண்ண தொடரில் அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தன.

இது தவிர உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக பதிவு செய்யப்பட்ட மூன்றாவது மிகப் பெரிய வெற்றியாக இந்த வெற்றி பதிவு செய்யப்பட்டது.

2015ஆம் ஆண்டு சிட்னியில் வைத்து தென்னாபிரிக்கா அணி, மேற்கிந்திய தீவுகள் அணியை 257 ஓட்டங்களால் வெற்றிக் கொண்டதே மிகப்பெரிய வெற்றியாக உள்ளது.

மேலும், இரு அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகளில், இந்திய அணி, ஓட்டங்கள் அடிப்படையில்



பதிவு செய்த நான்காவது மிகப் பெரிய வெற்றியாக இது பதிவு செய்யப்பட்டது.

2018ஆம் ஆண்டு மும்பையில் வைத்து மேற்கிந்திய தீவுகள் அணியை, 224 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதே முதல் மிகப்பெரிய வெற்றியாகவுள்ளது.

அத்தோடு, உலகக்கிண்ண வரலாற்றில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக பந்து வீச்சாளர் ஒருவர் பதிவு செய்த சிறந்த பந்து வீச்சும் இப்போட்டியில் பதிவு செய்யப்பட்டது.

இப்போட்டியில் மொஹமட் ஷமி 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை சாய்த்திருந்தார். இதுவே சிறந்த பந்து வீச்சு பிரதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக 1983 ஆம் ஆண்டு லோட்ஸ் மைதானத்தில் வைத்து அமர்நாத், 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்ததே சிறந்த பந்து வீச்சு பிரதியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. தற்போது அதனை ஷமி முறியடித்துள்ளார்.

இந்த வெற்றியின் மூலம், இந்திய அணி புள்ளிபட்டியலில், 11 புள்ளிகளுடன் நியூஸிலாந்தை பின்தள்ளி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தோல்வியடைந்த மேற்கிந்திய தீவுகள் அணி, புள்ளி பட்டியலில், 3 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்தில் உள்ளது.

# பராகுவேயை வீழ்த்தி அரையிறுதிக்கு பிரேஸில்

தென் அமெரிக்க கண்டத்து அணிகளுக்காக நடத்தப்படும் கோபா அமெரிக்கா உதைபந்துத் தொடர் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

46ஆவது அத்தியாயமாக நடைபெறும் இத்தொடரில், தற்போது காலிறுதிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில், பிரேஸில் அணியும், பராகுவே அணியும் மோதிக் கொண்டன.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியானது, அரினா டோ கிராமியோ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆரம்பம்முதலே இரண்டு அணிகளும் ஆக்ரோஷமாக விளையாடின. எனினும் முற்பாதியில் இரண்டு அணிகளால் கடுமையாக போராடியும் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் முற்பாதி, கோல் எதுவும் இன்றிச் சமநிலைக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் கோல் போட முட்டி மோதிக் கொண்டன.

இதன் விளைவாக பிரேஸில் அணிக்கு பெனால்டி ஒன்று வழங்கப்பட்டபோதும் வீடியோ உதவி நடுவர் மூலம் அது மறுக்கப்பட்டது.

எனினும், அப்போது தவறிழைத்த பரகுவே வீரர் பெர்பியான் பல்புவனாவுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனையடுத்து, 10



வீரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணியாக பராகுவே அணி விளையாடியது.

இதன்பிறகு கடுமையாக முயற்சித்தும் இரண்டு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை. போட்டிக்காக வழங்கப்பட்ட நேரமும் முடிவடைந்தது.

ஆகையால் போட்டியின் வெற்றியாளரை தெரிவு செய்வதற்காக, இரண்டு அணிகளுக்காகவும் பெனால்டி ஷூட் அவுட் முறை கொடுக்கப்பட்டது.

இதில் தனது பலத்தை நிரூபித்த பிரேஸில் அணி, பெனால்டி ஷூட் அவுட் முறையில் 4 – 3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தது.

இதற்கு முன்னதாக கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில், பிரேஸில் அணி, 3 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ஜென்டீனா மற்றும் வெனிசுவேலா அணிகளுக்கு இடையிலான காலிறுதியில் வெற்றி பெறும் அணியுடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, பிரேஸில் அணி பெலோ ஹொரிசன்டேவில் நடைபெறும் அரையிறுதியில் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (ஐ)

## இன்றைய ஆட்டங்கள்

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் — பிற்பகல் 3 மணி

நியூஸிலாந்து - ஆஸ்திரேலியா — மாலை 6 மணி

## சஹ்ரானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் நேற்று சாட்சியங்களை அளிக்கும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கேள்வி:- ச.தொ.ச வாகனங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன எனக்குற்றச்சாட்டுகள்உள்ளனவா?

பதில்:- கடந்த ஒக்ரோபரில் அமைக்கப்பட்ட அரசுக்கு என்னை அழைத்தனர். ஆனால், நான் செல்லவில்லை. இதனால் என் மீது குற்றம்சாட்டினர். இந்தக் கடுமையான குற்றச்சாட்டுகள் குறித்து அவர்கள் பொலிஸில் புகார் செய்யக்கூடும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதனால் நான் பொலிஸ் சென்று அவர்கள் மீது புகார் அளித்தேன்.

கேள்வி:- தாக்குதல் விசாரணையில் தலையிட்டீர்கள் குற்றச்சாட்டுகள் உள்ளனவா? முஸ்லிம் மத விவகார அமைச்சின் ஆலோசகரின் மகன் குறித்து இராணுவத் தளபதியிடம் பேசினீர்களா?

பதில்:- அவர் அரச பொது நிர்வாக சேவையின் முதற்தர அதிகாரி. ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அமைச்சராக இருந்த போது, அவர் அந்த அமைச்சில் மேலதிக செயலாளராகவும் பணியாற்றினார். 1990 இல் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்ட போது அவர் புனர்வாழ்வு இயக்குநராக இருந்தார். இனந்தெரியாத குழு ஒன்று தனது மகனை அழைத்துச் சென்றதாகக் கூறி அவர் பொலிஸில் புகார் அளித்துள்ளார். எங்களிடம் அவர் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். விசேட அதிரடிப்படையும் அப்படியே கூறியுள்ளது. அவர் என் வீட்டுக்கு வந்து கண்ணீருடன் தனது மகன் எங்கே இருக்கின்றார் என்று தேடித்தருமாறு சொன்னார். தெஹிவளை பொலிஸில் கேட்டபோதும், தெஹிவளைக்குப் பொறுப்பான டி.ஐ.ஜி. விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதும் அவர்கள் கைதுசெய்யவில்லை என்றும், ஆனால் தாம் தேடுவதாகவும் கூறினார்கள். நான் இராணுவத் தளபதியை அழைத்து அவரிடம் இது பற்றி வினவி குறித்த நபரைப் பார்க்கச் சொன்னேன். தொடர்ந்து அந்தத் தந்தையார் கேட்டுக்கொண்டதால் இன்னொரு முறை அழைத்தபோது, இதனைக் கவனிப்பதாக இராணுவத்தளபதி கூறினார். மீண்டும் 28ஆம் திகதி அழைத்தபோது கைதை உறுதி செய்த அவர் கைதானவரை பொலிஸில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார். அதன் பிறகு நான் அழைப்பை ஏற்படுத்தவில்லை. என்ன நடந்தது என்பதை அறிய மட்டுமே நான் விரும்பினேன். மகன் இன்னும் உயிருடன் இருக்கிறாரா என்று பார்க்க தந்தை விரும்பினார். அவர் இராணுவக் காவலில் இருப்பதை அறிந்ததும், நான் திரும்ப அழைக்கவில்லை.

கேள்வி:- தொழிலதிபர் இப்ராஹிமிடம் பொருள்களை வாங்க அழுத்தங்களை வழங்கினீர்களா?

பதில்:- நீங்கள் அதைப் பற்றி அமைச்சின் செயலாளரிடம் கேட்கலாம். நான் அழுத்தங்களை வழங்கியதில்லை.

கேள்வி:-தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை துருக்கி அனுப்பியிருந்தமை உங்களுக்குத் தெரியுமா?

பதில்:- எனக்குத் தெரியாது.

கேள்வி:- நீங்கள் காத்தான்குடியில் அரசியல் செய்கிறீர்களா?

பதில்:- பெரிய அரசியல் என்று எதுவும் இல்லை. எங்களிடமிருந்து ஒரு பிரதேச சபை உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கேள்வி:- பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகள் பற்றி முன்னர் உங்களுக்குத் தெரியுமா? பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரானை உங்களுக்குத் தெரியுமா?

பதில்:- உங்கள் மதம் உங்களுக்கானது. எனது மதம் எனக்கானது எனக் குர்ஆனில் சொல்லப்பப்படுகின்றது. சிலருக்குப் பிரச்சினை இருக்கலாம் . நான் ஓர் அரசியல்வாதி. நான் மதப் பிரச்சினைகளில் ஈடுபடவில்லை. சஹ்ரான் ஒரு மௌலவி அல்லர். அவர் ஒரு மதத் தலைவர் அல்லர். அவர் மட்டுமே தன்னை மௌலவி என்று அழைத்தார். இந்தச் சம்பவத்துக்கு முன்னர் பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகள் பற்றி எனக்குத் தெரியாது. சஹ்ரானை என் வாழ்நாளில் நான் சந்தித்ததேயில்லை.

கேள்வி: - ஹிஸ்புல்லா உங்கள் கட்சியில் இருந்தார் அல்லவா?

பதில்:- ஹிஸ்புல்லா எங்கள் கட்சியில் சுமார் 5 ஆண்டுகளாக இருந்தார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் ஆதரித்தபோது, அவர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கச் சென்றார்.

கேள்வி:- 2015இல் வாக்களித்தவர்கள் சஹ்ரானுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பதில்:- தெரிவுக்குழுவில் சொல்லப்பட்டதை நான் பார்த்தேன். பின்னர் நான் எங்கள் அமீர் அலியிடம் கேட்டேன். அத்தகைய ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திடவில்லை என்று அவர் கூறினார்.

கேள்வி:- நீங்கள் சஹ்ரானைச் சந்திக்கவில்லை என்று சொன்னீர்கள். ஆனால், நீங்கள் சந்தித்த படங்கள் வெளியாகினவே?

பதில்:- அது 015 ஒக்ரோபர் 15ஆம் திகதியன்று அரபுக் கல்லூரியில் நடந்த விழாவில் எடுக்கப்பட்ட படம். அது சஹ்ரான் அல்லர். அது மௌலவி நிஸ்தார். தன்னைச் சஹ்ரான் என்று தொலைக்காட்சியில் காட்டியதாக அவர் என்னிடம் கடிதம் மூலம் தெரிவித்தார். அவர் நிட்டம்புவ பொலிஸ்நிலையத்துக்குச்சென்று புகார் அளித்துள்ளார். அவர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கும் சென்று புகார் அளித்துள்ளார். இவை தவறான குற்றச்சாட்டுகள். சஹ்ரானை என் வாழ்நாளில் கண்டதில்லை. தாக்குதலின் பின்னரே சஹ்ரானின் படத்தைக் கண்டேன்.

கேள்வி:- வில்பத்துவில் உங்களுக்குப் பல ஏக்கர் நிலம் இருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் இருந்தனவா?

பதில்:- 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு, வடக்கு மாகாணத்துக்கு எந்த நிலமும் வழங்கப்படவில்லை. 2009இல் போருக்குப் பிறகு ஒரு பணிக்குழு நிறுவப்பட்டது. இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச அதிபர் ஆகியோர் அதில் இருந்தனர். எங்கு மீள் குடியேற்றம் செய்ய வேண்டும் என்று அந்தக் குழுவே முடிவு செய்தது. முன்னைய அரசே இதைச் செய்தது.

வில்பத்து தேசிய பூங்காவுக்குள் ஒரு குடும்பத்துக்குக்கூட நிலம் வழங்கப்படவில்லை. மன்னாரிலேயே மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. ஆனால், வில்பத்து தேசிய பூங்காவுக்குள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்தார். வில்பத்து தேசிய பூங்காவுக்குள் மீள்குடியேற்றம் நடக்கவில்லை என்று அதன் அறிக்கை கூறுகின்றது. இந்த அரசு வந்தபோது, எந்த நிலமும் வழங்கப்படவில்லை.

என் மீது தவறான செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களிடம் விசாரணையை நடத்துமாறு தெரிவுக்குழுவிடம் கேட்கிறேன். 55 ஏக்கர் நிலப்பரப்பு மாத்திரமே எனக்கு உள்ளது. 8000 ஏக்கர் நிலப்பரப்பு கிடையாது. அவ்வாறு காணி இருக்குமாயின், 55 ஏக்கரைத்தவிர ஏனைய காணிகளை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கவும். (ஐ)

## அடுத்த ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று இந்த உறுதியை அளித்துள்ளது.

மரண தண்டனையை அமுல்படுத்துவதை நிறுத்துவதற்காக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்ன இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மரண தண்டனைக்கு இடைக்காலத்தடை வழங்கிசிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிடுமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அதனூடாகப் பாரிய மனித உரிமை மீறல் ஏற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக மனுதாரர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக மரண தண்டனையை அமுல்படுத்துவதை நிறுத்துவதற்காக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே, சிறைச்சாலைகள் ஆணையாளர் ஒரு வாரத்துக்குள் மரண தண்டனை நிறைவேறாது என்ற உறுதிமொழியை வழங்கினார். (ஐ)

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நேற்றுச் சாட்சியம் அளித்தார்.

அவரின் சாட்சியத்தையடுத்து விசேட அறிவிப்பொன்றைவிடுத்த தெரிவுக்குழுவின் தலைவரும் பிரதிச் சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி, பதில் பொலிஸ்மா அதிபர் நியமித்த விசேட பொலிஸ் குழு - உயிர்த்த ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்களுடன் ரிஷாத் பதியுதீனுக்குத் தொடர்பில்லை என்று தெரிவுக்குழுவுக்கு அறிவித்திருப்பதாகக் கூறியதுடன் அந்தக் கடிதத்தையும் வாசித்துக் காட்டினார். (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் வேண்டுகோளின்பிரகாரம்தான் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இப்போது அவர், தனக்குத் தெரியாமல் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று பொய்யுரைக்கின்றார். இது அவரின் கோமாளிக்கூத்தாகும். இந்தக்கூத்து இன்னமும் 5 மாதங்களுக்குத்தான் தொடரும். அதன் பின்னர் எல்லாம் முடிவுக்கு வரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கரவெட்டி புதுத்தோட்டம் விநாயகர் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்கு கிடைத்த பாரிய வெற்றி. அதை நான் செய்து முடித்தேன் என்று பெருமை பாராட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இப்போது அது ஓர் அரசியல் சூழ்ச்சி, தனக்குத் தெரியாமல் செய்து விட்டார்கள் என்றெல்லாம் கருத்து வெளியிட்டு வருகின்றார். அதிலே என்னுடைய பெயரையும் அவர் தூக்கிக்காட்டியுள்ளார். அதைத் தயாரித்ததில் நானும் ஒருவன் என்று அவர் சொல்லியிருக்கின்றார்.

அதைத் தயாரித்தவர்களில் நான் ஒருவன் அல்லன. அவர் தெரியாததனத்தால் அந்தப் பெருமையை எனக்குத் தந்தார். அது ஒரு விதத்தில் எனக்கு நல்லது. ஏனெனில் 19ஆவது திருத்தம் மிகவும் நல்லதொரு திருத்தம்.

அதை நிறைவேற்றுவதற்காகப் பாடுபட்டவர்களில் நானும் ஒருவன் என்று சொன்னால் அது சரி.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டபோது ஜனாதிபதியின் சார்பில் நீதிமன்றத்தில் வாதிட்டவர்களில் நானும் ஒருவன்.

நீதிமன்றத்திலேயே இதற்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ தரப்பு வாதிட்டது. இது தன்னார்வத் தொண்டர்களினால் கொண்டு வரப்பட்ட திருத்தம் என்று மஹிந்த தரப்பு சொன்னபோது, இல்லை இது பொலனறுவையில் இருந்த வந்த ஒரு விவசாயியின் மகன் கொண்டுவந்த திருத்தம் என்று உயர்நீதிமன்றத்தில் நான் தெரிவித்தேன்.

ஆனால், அந்த விவசாயியின் மகன் இந்தத் திருத்தம் இப்போது தன்னுடையது அல்ல, இது தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் கொண்டுவந்த திருத்தம் என்று பலவாறாகப் பொய்யுரைக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து எமக்கு பாரிய சவால்மிக்க விடயம் அல்ல. இது அவரின் கோமாளிக்கூத்தாகும். இந்தக் கூத்து இன்னமும் 5 மாதங்களுக்குத்தான் தொடரும். அதன்பின்னர் எல்லாம் முடிவுக்கு வரும்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் திடீரென்று குத்துக்கரணம் அடித்து தன்னுடைய பழைய உறுப்பினர்களுடன் சேர்ந்து அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டார் ஜனாதிபதி. அதனை நீதிமன்றத்தின் ஊடாக நாம் முறியடித்து விட்டோம். அதனாலே எங்கள் மீது அவருக்கு இன்னமும் கோபம் இருக்கின்றது.

இந்த 19ஆவது திருத்தத்தின் மூலமாகத்தான் ஒக்டோபர் அரசியல் சதிப் புரட்சி முறியடிக்கப்பட்டது. அதனால்தான் ஜனாதிபதிக்கு 19ஆவது திருத்தத்தின் மீதும் கோபம். எங்கள் மீதும் கோபம்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்தான் இந்த 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அப்போது மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் பலரும் இதற்கு ஆதரவு வழங்கினார்கள்.

இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் இதற்கு இணக்கம் தெரிவிப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ தரப்புடன் பேச்சு நடத்த 4 பேர் கொண்ட குழுவை தனது சார்பில் ஜனாதிபதி நியமித்தார். நானும், ரவூப் ஹக்கீமும், அநுரகுமார திஸாநாயக்கவும், அஜித் பி பெரேராவும் அந்தக் குழுவில் அங்கம் வகித்தோம்.

மஹிந்த தரப்புடன் பேசி 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றித் தருமாறு ஜனாதிபதி எம்மிடம் கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க ஜனாதிபதி சார்பில் மஹிந்த தரப்புடன் நாம் பேச்சு நடத்தினோம். ஒவ்வொரு நாளும் இரவு நாம் ஜனாதிபதியைச் சந்திப்போம். மஹிந்த தரப்புடன் பேசப்பட்ட விடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவிப்போம். நள்ளிரவு வரை ஜனாதிபதியுடனான எமது சந்திப்பு தொடரும். இதன்பிரகாரம்தான் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இப்போது வாய்க்கு வந்த மாதிரி ஜனாதிபதி பொய்யுரைக்கின்றார். எல்லாம் விரைவில் முடிவுக்கு வரும் – என்றார். (ஐ)

## மரண தண்டனைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்குமிடையில் கடந்த புதன் இரவு தொலைபேசி ஊடாக இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலனறுவையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது கருத்து வெளியிட்டார்.

குற்றவாளிகள் நால்வருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என புதன்கிழமை காலை நான் அறிவித்திருந்தேன். அன்றிரவு ஐ.நா. பொதுச் செயலாளர் எனக்கு அழைப்பை ஏற்படுத்தினார்.

என்னால் விடுக்கப்பட்ட அறிவிப்பு குறித்து வினவினார். இதற்கு நானும் பதில்களை வழங்கினேன்.

இலங்கையில் பல்கலைக் கழக மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். பாடசாலை மாணவர்களும் இலக்குவைக்கப் படுகின்றனர். இதனால் சமூகம் சீரழியும் அபாயம் உள்ளது.

எந்த தனிநபர் மீதான வெறுப்பு காரணமாகவும் கோபம் காரணமாகவும் நான் மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கான உத்தரவில் கைச்சாத்திடவில்லை. நாட்டையும் எதிர்கால தலை முறையையும் காப்பாற்றுவதற்காகவே உத்தரவில் கைச்சாத்திட்டேன். – என்றார் ஜனாதிபதி மைத்திரிபால. (ஐ)

## பூஜித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் கைதாகவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் மீது மேலதிக குற்றவியல் விசாரணைகளை மேற்கொள்ளச் சட்ட மா அதிபர் திணைக்களம் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையிலேயே அவர்கள் இருவரும் எந்நேரமும் கைது செய்யப்படலாமென உயர்மட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக பூஜித மற்றும் ஹேமசிறி ஆகியோர் இந்தத் தாக்குதல்களை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராகி சாட்சியமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir


# தமிழருக்குத் தீர்வு வேண்டி வவுனியாவில் மகா யாகம்!

## காணாமற்போனோரின் உறவுகள் பங்கேற்றனர்







வவுனியா, ஜூன் 29

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும், தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டியும், சுதந்திரமான வாழ்வு பெற வேண்டியும் மகா யாக வேள்வியும் ஆன்மீகப் பிரார்த்தனையும் நேற்றுக் காலை வவுனியாவில் இடம்பெற்றன.

வவுனியா ரயில் நிலைய வீதியிலுள்ள முதிரைத் தோட்டம் தேடி வந்த பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற இந்த மகா யாகத்திலும் ஆன்மீகப் பிரார்த்தனையிலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஈடுபட்டனர்.

சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக்குருக்கள் தலைமையில் யாகம் இடம்பெற்றது.

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பிரார்த்தனை, கூட்டு வழிபாடு, மகா யாக வேள்வி, ஆன்மீகப் பிரார்த்தனை ஆகியவற்றில் பங்கேற்றனர்.

தமது உறவுகளை நினைத்தும் நிரந்தரத் தீர்வு கிடைக்க வலியுறுத்தியும் அவர்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் அருளுரையை கொழும்பு ஆன்மீக அருள்ஜோதி சர்வதேச இந்து குரு பீடாதிபதி ஸ்கந்தசாபம் சிவ சரவணபவ ஐயப்பதாசக் குருக்கள் ஆற்றியதுடன் அந்தணர்களும் சிவாச்சாரியார்களும் கலந்து கொண்டனர்.

பின்னர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்ட இடத்திற்கு சென்றடைந்தனர். (ஐ – 100)

# வழங்கிய வாக்குறுதியை மீறக்கூடாது இலங்கை!

## எச்சரிக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

பிரஸ்சல்ஸ், ஜூன் 29

தூக்குத் தண்டனை நிறைவேற்றுவது, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 73 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கை வழங்கிய வாக்குறுதியை மீறும் செயல் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.



அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

ஐரோப்பிய ஒன்றியம் மரணதண்டனைவழங்கப்படுவதை தெளிவாகவும் எந்தச் சந்தேகமும் இன்றி எதிர்க்கின்றது. இலங்கை மரண தண்டனையை நிறைவேற்றினால், அது சர்வதேச சமூகம், முதலீட்டாளர்கள் மற்றும் நாட்டினருக்குத் தவறான செய்தியை கொண்டு சேர்க்கும்.

மரண தண்டனை என்பது கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் அவமதிக்கத்தக்க தண்டனை. போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்களை ஒழிக்க மரண தண்டனை அமுல்படுத்துவதாக இலங்கை அரசு கூறினாலும், மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் அந்த குற்றங்களைத் தடுக்க முடியாது என்பது பல ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை வழங்கியுள்ளது. அத்துடன் சர்வதேச பொது மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான இணக்கப்பாடுகள் உட்பட 27 இணக்கப்பாடுகளை இலங்கை வெற்றிகரமாகமற்றும் பலன்தரக் கூடிய வகையில் செயற்படுத்துகிறதா என்பதை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை நெகிழ்வுத் தன்மை, ஜனநாயகம் மற்றும் சகல தரப்பினரின் பங்கேற்புடன் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பெரிய முன்னேற்றத்தை அடைந்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று, சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை நிறைவேற்றும் என எதிர்பார்க்கின்றோம் – என்றுள்ளது. (ஐ)

# தங்கொட்டுவ சந்தையில் முஸ்லிம்களுக்கு அனுமதி

## மாரவில நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூன் 29

வென்னப்புவ பிரதேச சபையின் கீழ் இயங்கும் தங்கொட்டுவ வாராந்தச் சந்தையில் முஸ்லிம் வர்த்தகர்களும் வியாபாரத்தில் ஈடுபட அனுமதி வழங்குமாறு மாரவில நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தங்கொட்டுவ வாராந்தச் சந்தையில்முஸ்லிம்வர்த்தகர்கள் வியாபாரம் செய்வதற்குத் தடை விதித்து வென்னப்புவ பிரதேச சபை தலைவரினால் அண்மையில் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பில் நேற்று வென்னப்புவ பிரதேச சபை தலைவரிடம் மாரவில நீதிவான் நீதிமன்றம் விசாரணை மேற்கொண்டிருந்ததுடன் அனைத்துத் தரப்பினருக்கும் வியாபாரம் செய்ய அனுமதி வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஐ)

# மரண தண்டனை விதிப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது

## சுட்டிக்காட்டுகின்றார் சம்பிக்க



கொழும்பு, ஜூன் 29

மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு முன்னர், நாட்டிலுள்ள எந்தவொரு வழக்கு விசாரணையையும் மூன்று வருடங்களுக்குள் நிறைவு செய்வதற்குத் தேவையான சட்டத்தைக்கொண்டு வர வேண்டும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்நாட்டிலுள்ள பிரச்சினைகளை மரண தண்டனையினால் தீர்த்துவிட முடியாது. சட்டத்தைச் சரியாகச்செயற்படுத்த முடியாமல் உள்ளமைக்கே முதலில் தீர்வு காண வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் ஒரு வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு குறைந்தது17 வருடங்கள்தேவைப்படுகின்றன. இதனால், குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்குச் சட்டத்தில் உள்ள பயம் இல்லாமல் போயுள்ளது – என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2019 இல் வெளியிடப்பெற்றது.